



Publisher
Sword of the Spirit
Word Partners Association

முதல் பதிப்பு 2000 பிரதிகள் 2015
பதிப்புரிமை ஆசிரியருக்கே உரியது

Power in the Word Church
வார்த்தையில் வல்லமை சபை
7-1-18B2/1, அண்ணா நகர்,
வத்தலக்குண்டு 624 202,
நிலக்கோட்டை வட்டம்,
திண்டுக்கல் மாவட்டம், தமிழ்நாடு, இந்தியா.
தொலைபேசி 04543 264312,
அலைபேசி 94864 85810, 94869 07064
E.Mail : rev.johnsondurai@gmail.com

பொருளடக்கம்

1.	ஆலயம் கட்டப்படுவதின் நோக்கம்	1
2.	எப்படிப்பட்ட ஆலயத்தைக் கட்ட வேண்டும்	6
3.	தேவன் யாரைக்கொண்டு கட்டுகிறார்	7
4.	தேவன் ஆலயத்தின் தேவைகளையெல்லாம் சந்திக்கிறவர்	17
5.	எப்படியெல்லாம் இராஜாக்களும், ஜனங்களும் காணிக்கைகளை செலுத்தினார்கள்	24
6.	தேவாலயத்தினை கட்டுகிறதில் தேவனுடைய கரம்	33
7.	புதிய ஏற்பாட்டுக் காலத்தின் சபைகள்	37
8.	தேவனுடைய ஆலயம் மகா அலங்காரமாயிருக்கிறது	40
9.	தேவனுடைய வீட்டைக் குறித்து தாவீதுக்கு உண்டாயிருந்த வைராக்கியம்	42
10.	தேவாலயத்திலிருந்து வரும் ஆசீர்வாதங்கள்	46
11.	தேவாலயத்திற்குரிய இடம்	49
	ஜெபக்குறிப்புகள் / விசுவாச வசனங்கள்	56

முகவுரை

திருச்சபை என்பது கிறிஸ்துவின் சரீரம் என்று வேதம் கூறுகிறது. கிறிஸ்துவின் சரீரமாகிய சபை மனிதர்களுக்கு வாழ்வளிக்கின்ற இடமாக இருக்கிறது. நாம் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்ட வேண்டுமானால், முதலாவது தேவன் எப்படிப் பட்டவர் என்றும், அவருக்கு எப்படிப்பட்ட ஆலயத் தினை கட்ட வேண்டும் என்றும் அறிந்துகொள்ள வேண்டும். தேவாலயத்தைக் கட்ட தரிசனமும், ஆவியானவரின் வழிநடத்துதலும் தேவை. ஆலயம் சிறப்பாய் கட்டப்பட அதிகமான பணமும் பொருளும் நமக்குத் தேவைப்படுகிறது, இதை யெல்லாம் கர்த்தர் எப்படி சந்திப்பேன் என்று சொல்லியிருக்கிறார் என்பதை அறிந்து; அதை நாம் விசுவாசிக்க வேண்டும்.

தேவனே நம்மில் அவருக்கு ஆலயத்தி னைக் கட்டவேண்டும் என்ற வாஞ்சையையும் விருப்பத்தையும் உண்டாக்கி, அதை நிறை வேற்றுகிறார். ஆலயம் என்பது தேவனுடைய நாமத்திற்கு மகிமையைச் செலுத்துகின்ற ஒரு இடம். சாலொமோன் கர்த்தரின் நாமத்திற்கு ஒரு ஆலயத்தைக் கட்ட வேண்டும் என்று விரும்பினான்.

தேவன் மனிதர்களின் மத்தியில் வாசம் பண்ணும்படி, ஒரு பரிசுத்த ஸ்தலத்தை உண்டு பண்ணுவாயாக என்று வேதத்தில் கூறி யிருக்கிறதைப் பார்க்கிறோம்.

தேவன் ஆலயத்தின் தேவைகளை யெல்லாம் சந்திக்கிறவர், கர்த்தர் வீட்டைக் கட்டுகிறவர். தேவனுடைய ஆலயம் மனிதர் களுக்கு வாழ்வளிக்குமிடம் என்ற அறிவு மக்களுக்கு உண்டாக்கும்போது மக்கள் எழும்பிக் கட்டுவார்கள். ஆகவே தேவாலயத்தைக் கட்டு வதைப் பற்றி வேதத்தில் கூறியுள்ள காரியங்களை இந்த சிறிய புத்தகத்தில் எழுதியுள்ளேன். இது அநேகருடைய விசுவாசத்தினைத் தூண்டி அநேக தேவாலயங்கள் கட்டப்பட உதவியாக இருக்கும் என்பதை நான் விசுவாசிக்கிறேன்.

ஊழியர்கள் எழும்பி திருச்சபையை கட்ட ஆரம்பிக்குமுன் இந்த புத்தகத்தினை ஒருவிசை உங்கள் திருச்சபை மக்களை வாசிக்க வையுங்கள், தேவாலயம் கட்டுகிற காரியத்திலே மாபெரும் எழுப்புதலைக் காண்பீர்கள்.

ஆசிரியரைப் பற்றி...

சங்கை ச. ஜான்சன் துரை அவர்கள்; 1991 ஆம் ஆண்டு முதல் ஒரு அப்போஸ் தலனாக ஊழியத்தினை துவக்கி திருச்சபை களை உண்டாக்கி **“வார்த்தையில் வல்லமை ஊழியங்கள்”** என்ற பெயரில் நடத்திக்கொண்டு வருகிறார். இவர் மூலமாய்ப் பல திருச்சபைகள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இவரது போதனை யால் ஆசீர்வதிக்கப்பட்ட தேவ ஊழியர்கள் தேசத்திலே அநேகர். அநேக வெளியரங்க மான அற்புதங்களையும் அடையாளங் களையும் இவர்கள் ஊழியத்தில் தேவன் செய்து வருகிறார்.

“Sword of the Spirit Word of God” **“தேவனுடைய வார்த்தை ஆவியின் பட்டயம்”** என்ற பெயரில் ஒரு அமைப்பை ஏற்படுத்தி, அதன் மூலம் “Power in the Word” **“வார்த்தையில் வல்லமை”** என்ற பத்திரிக்கையையும் நடத்தி வருகிறார். இந்தப் பத்திரிக்கை பூமியின் கடைசிவரை தேவனுடைய வார்த்தையைக் கொண்டுசெல்ல வேண்டும் என்ற நோக்கத் துடன் ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

திருச்சபையின் போதகராயிருக்கிற இவர் தேவனுடைய வழி நடத்துதலினால், “Shepherding the Shepherds” **“மேய்ப்பர்களுக்கு மேய்ச்சலளிக்க”** என்ற தரிசனத்துடன் “Apostolic Council of India Diocese” **“அப்போஸ்தல கவுன்சில் ஆஃப் இந்தியா பேராயம்”** என்னும் பேராயத் தினை ஏற்படுத்தி, அதின் தலைமைப் பேராயராக இருந்து அதையும் நடத்திக் கொண்டு வருகிறார். இந்திய தேசத்தின் பல்வேறு மாநிலங்களிலுள்ள திருச்சபைகள் இந்தப் பேராயத்தின் கீழ் ஒருங்கிணைக்கப் பட்டு சிறப்பாக செயல்பட்டுக்கொண்டிருக்கிறது.

ஆலயம் கட்டப்படுவதின் நோக்கம்

தேவாலயம் கட்ட தேவன் தரும் ஆலோசனைகள்

1 ஆலயம் என்பது எல்லாவற்றையும் எல்லா வற்றாலும் நிரப்புகிறவராகிய கிறிஸ்துவின் சரீரம் என்று வேதம் கூறுகிறது. என் பிதாவின் வீடு என்று இயேசு கூறுகிறார். சாபத்தை ஆசீர்வாதமாக மாற்றின தேவனுடைய சபை என்று நெகேமியாவின் புஸ்தகத்தில் கூறப்பட்டுள்ளது. என்னுடைய வீடு எல்லா ஜனங்களுக்கும் ஜெபவீடு எண்ணப்படும் என்று இயேசு கூறுகிறார். நீங்கள் மலையின்மேல் ஏறிப்போய், மரங்களை வெட்டிக்கொண்டு வந்து, ஆலயத்தைக் கட்டுங்கள்; அதின் பேரில் நான் பிரியமாயிருப்பேன், அதினால் என் மகிமை விளங்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார். நாம் தேவனுடைய வீட்டில் வாசமாய் இருக்கும்படி தேவாலயம் நம் மத்தியில் கட்டப்பட வேண்டியது மிகவும் அவசியம். தேவனுடைய ஆலயம் கட்டப்படும்படி வேதம் கூறும் ஆலோசனைகளைப் பார்ப்போம்.

தேவன் தாமே வாஞ்சையையும் விருப்பத்தையும் உண்டாக்கி, அதை நிறைவேற்றுகிறார்.

2 நாளாகமம் 6:7 இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரின் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்ட வேண்டும் என்கிற விருப்பம் என் தகப்பனாகிய தாவீதின் மனதில் இருந்தது.

கர்த்தர் ஆலயத்தைக் கட்டுகிறவர்

சங்கீதம் 127:1 கர்த்தர் வீட்டைக் கட்டாராகில், அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா.

மத்தேயு 16:18 இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை.

சிருஷ்டிப்பின் தேவன் தமது சகல சிருஷ்டிப்பு களுடனும் வாசமாய் இருக்க விரும்புகிறார். அவர் பழைய ஏற்பாட்டில், மோசேயின் நாட்களில் ஆசரிப்புக் கூடாரத்திலும் ஜனங்களுடைய வாசஸ்தலங்களிலும் உலாவினார். நம்முடைய தேவன் மிகவும் பெரியவர். ஆகவே அவர், சாலொமோன் அவருக்கு ஆலயத்தை கட்டவேண்டும் என்று விரும்பின பொழுது, அவன் தேவன் எவ்வளவு பெரியவர், எப்பேர்ப்பட்ட மகிமையான ஆலயத்தில் பரலோகத்தில் வாசமாய் இருக்கிறவர் என்பதை உணராமல் இருந்தால், அவருக்கு இழுக்குண்டாகக் கூடிய அளவில் ஆலயத்தைக் கட்டிவிடுவான் என்பதால், தான் எவ்வளவு பெரியவர் என்பதை சாலொமோனுக்கு உணர்த்துகிறார்.

ஏசாயா 66:1 கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்; வானம் எனக்குச் சிங்காசனம், பூமி எனக்குப்பாதபடி; நீங்கள் எனக்குக் கட்டும் ஆலயம் எப்படிப்பட்டது? நான் தங்கியிருக்கும் ஸ்தலம் எப்படிப்பட்டது?

ஆகவேதான், மிகப்பெரிய தேவனுக்கு நாம் ஆலயம் கட்டுகிறோம் என்ற உணர்வுடன் கட்ட வேண்டும்.

ஆலயம் என்பது தேவனுடைய நாமத்திற்கு மகிமையைச் செலுத்துகின்ற இடம்

1 இராஜாக்கள் 8:27 தேவன் மெய்யாக பூமியிலே வாசம் பண்ணுவாரோ? இதோ, வானங் களும் வானாதி வானங்களும் உம்மைக் கொள்ளாதே; நான் கட்டின இந்த ஆலயம் எம்மாத்திரம்?

2 நாளாகமம் 2:6 வானங்களும் வானாதி வானங்களும் அவரைக் கொள்ளக்கூடாதிருக்க, அவருக்கு ஒரு ஆலயத்தைக் கட்ட வல்லவன் யார்? அவர் சந்நிதியில் தூபங்காட்டுகிறதற்கே ஒழிய, வேறே முகாந்தரமாய் அவருக்கு ஆலயம் கட்டுகிறதற்கு நான் எம்மாத்திரம்?

ஆலயம் தேவனுக்கு மகிமையான ஆராதனையைச் செலுத்துகிற இடம், ஆராதிக்கும்படியாகவே ஆலயம் கட்டப்பட வேண்டுமே தவிர வேறே முகாந்தரமாய்க் கட்டினால் அது வீண்.

ஆலயம் என்பது தேவனுடைய பாதபடி

1 நாளாகமம் 28:2 அப்பொழுது ராஜாவாகிய தாவீது எழுந்திருந்து காலூன்றி நின்று; என் சகோதரரே, என் ஜனமே, நான் சொல்வதைக் கேளுங்கள்; கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியும் நமது தேவனுடைய பாதபடியும் தங்குவதற்கு; ஒரு ஆலயத்தைக் கட்ட நான் என் மனதிலே நினைத்து, கட்டுகிறதற்கு ஆயத்தமும் பண்ணினேன்.

பாதபடி என்பதன் பொருள் தேவன் நம் மத்தியில் உலாவுகிறவர் அசைவாடுகிறவர் என்பதாம், உடன்படிக்கைப் பெட்டி தங்குவதற்கு என்ற வார்த்தையைப் பார்க்கிறோம். தேவன் புதிய உடன்படிக்கையை நம்மோடு செய்திருக்கிறார். அந்த உடன்படிக்கை நம் மத்தியில் நிலைத்திருந்து நிறைவேற, அந்த உடன் படிக்கையை மனிதர்கள் அறிந்துகொள்ளும்படி பிரசிங்கிக்கப்படவே புதிய ஏற்பாட்டுக்கால சபை.

தேவன் மனிதர்களின் மத்தியில் வாசம் பண்ணும்படி, ஒரு பரிசுத்த ஸ்தலத்தை உண்டுபண்ணுவோமாக

2 சாமுவேல் 7:13 அவன் என் நாமத்திற்கென்று ஒரு ஆலயத்தைக் கட்டுவான்; அவன் இராஜ்ய

பாரத்தின் சிங்காசனத்தை என்றைக்கும் நிலைக்கப் பண்ணுவேன்.

தேவனுடைய நாமத்தினை மக்கள் அறியும்படி, இயேசுவின் நாமத்திற்காக ஒரு ஆலயம் கட்டப்பட வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்.

ஆகாய் 1:2,4 இந்த ஜனங்கள் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுகிறதற்கு ஏற்றகாலம் இன்னும் வரவில்லை என்கிறார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

4. இந்த வீடு பாழாய்க் கிடக்கும்போது, நீங்கள் மச்சுப்பாவப்பட்ட உங்கள் வீடுகளில் குடியிருக்கும் படியான காலம் இதுவோ?

யாத்திராகமம் 25:8 அவர்கள் நடுவிலே நான் வாசம்பண்ண, எனக்கு ஒரு பரிசுத்த ஸ்தலத்தை உண்டாக்குவார்களாக.

ஆகாய் 1:8 நீங்கள் மலையின்மேல் ஏறிப் போய், மரங்களை வெட்டிக்கொண்டு வந்து ஆலயத் தைக் கட்டுங்கள்; அதின் பேரில் நான் பிரியமா யிருப்பேன், அதினால் என் மகிமை விளங்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

நாம் தேவனுக்கென்று ஆலயத்தைக் கட்ட எழும்பும் பொழுது, தேவன் நம்மேல் பிரியம் வைத்து நம்மை ஆசீர்வதிக்கிறார். தேவன் தம்முடைய ஆலயத்தின் பேரில் பிரியமாயிருக்கிறார். பூமியிலே ஆலயம் கட்டப்படுவது தேவனுக்கு மிகவும் பிரியம், அதிலிருந்து தம்முடைய மகிமையை வெளிப் படுத்துவார்.

ஆகாய் 2:4 ஆனாலும் செருபாபேலே, நீ திடன் கொள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; யோத்சதாக்கின் குமாரனாகிய யோசுவா என்னும் பிரதான ஆசாரியனே,

நீ திடன்கொள்; தேசத்தின் எல்லா ஜனங்களே, நீங்கள் திடன்கொள்ளுங்கள், வேலையை நடத்துங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் உங்களுடனே இருக்கிறேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

தேவனுக்கென்று ஆலயத்தைக் கட்ட நாம் முயற்சிக்கும் போது பல்வேறு தடைகளை வான மண்டலத்திலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகள் கொண்டுவரலாம், நாம் சோர்ந்து போகக்கூடாது. பணமும் பொருளும் நம்மிடம் இல்லையே என்ற சோர்வை பிசாசு கொண்டு வருவான். திடன் கொள்ளுங்கள், தைரியப்படுங்கள் என்று தேவன் கூறுகிறார்.

செருபாபேலே, நீ திடன்கொள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; யோத்சதாக்கின் குமாரனாகிய யோசுவா என்னும் பிரதான ஆசாரியனே, நீ திடன்கொள்; தேசத்தின் எல்லா ஜனங்களே, நீங்கள் திடன் கொள்ளுங்கள், வேலையை நடத்துங்கள், என்று கர்த்தர் சொல்லுகிறார். நாம் பயப்படாமல் வேலையை நடத்த வேண்டும். கர்த்தர் சொன்ன வார்த்தைக்கு நாம் கீழ்ப்படியும்போது அவர் நம்மோடிருந்து காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்.

எப்படிப்பட்ட ஆலயத்தைக் கட்ட வேண்டும்

தேவன் பெரியவர், எனவே அவருக்கென்று கட்டப்படுகின்ற ஆலயமும் பெரிதாயிருக்கும்

2 **1 நாளாகமம் 29:1** பின்பு தாவீது ராஜா சபையார் எல்லோரையும் நோக்கி; தேவன் தெரிந்து கொண்ட என் குமாரனாகிய சாலொமோன் இன்னும் வாலிபனும் இளைஞனுமாயிருக்கிறான்; செய்யவேண்டிய வேலையோ பெரியது; அது ஒரு மனுஷனுக்கு அல்ல, தேவனாகிய கர்த்தருக்குக் கட்டும் அரமனை.

2 நாளாகமம் 2:5,9 எங்கள் தேவன் எல்லா தேவர்களைப்பார்க்கிலும் பெரியவர்; ஆகையால் நான் கட்டப்போகிற ஆலயம் பெரிதாயிருக்கும்.

9. நான் கட்டப்போகிற ஆலயம் பெரியதும் ஆச்சரியப்படத்தக்கதுமாயிருக்கும்.

நாம் பெரிய தேவனை ஆராதித்துக் கொண்டு இருக்கிறோம், எனவே அவருக்குக்கட்டும் ஆலயமும் பெரிதாயிருக்க வேண்டும், அது ஒரு மனுஷனுக்கு அல்ல, தேவனாகிய கர்த்தருக்குக் கட்டும் அரமனை என்று தாவீது கூறுகிறார். எந்த ராஜாவும் குடிசையில் வாழ மாட்டான். தேவனாகிய கர்த்தர் மகா ராஜா எனவே பெரிய அரமனையை அவருக்குக் கட்டினால் தான் அது பொருத்தமாயிருக்கும். எனவேதான் தாவீது நான் கட்டப்போகிற ஆலயம் பெரியதும், ஆச்சரியப் படத்தக்கதுமாயிருக்கும் என்று கூறுகிறார்.

யாரைக் கொண்டு கட்டுகிறார்

ஜனங்கள் வேலை செய்ய ஆவலாயிருந்தார்கள்.

3 **நெகேமியா 4:6** நாங்கள் அலங்கத்தைக் கட்டிவந்தோம்; அலங்கமெல்லாம் பாதி மட்டும் ஒன்றாய் இணைந்து உயர்ந்தது; ஜனங்கள் வேலை செய்கிறதற்கு ஆவலாய் இருந்தார்கள்.

வேலை செய்கிற ஆசையை தேவனே ஜனங்களுக்கு உண்டு பண்ணுகிறார்.

கோரேசுடைய ஆவியைமட்டுமல்ல அநேக மனிதர்களுடைய ஆவியையும் தேவன் ஏவினார்

எஸ்றா 1:5 அப்பொழுது எருசலேமிலுள்ள கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுகிறதற்குப் போகும்படி யூதா பென்யமீன் வம்சங்களின் தலைவரும் ஆசாரியரும் லேவியருமன்றி, எவர்கள் ஆவியை தேவன் ஏவினாரோ அவர்கள் எல்லாரும் எழும்பினார்கள்.

நெகேமியா 2:18,20 என் தேவனுடைய கரம் என் மேல் நன்மையாக இருக்கிறதையும், ராஜா என்னோடே சொன்ன வார்த்தைகளையும் அவர்களுக்கு அறிவித்தேன்; அப்பொழுது அவர்கள்: எழுந்து கட்டுவோம் வாருங்கள் என்று சொல்லி, அந்த நல்ல வேலைக்குத் தங்கள் கைகளைத் திடப்படுத்தினார்கள்.

20. அதற்கு நான் மறுமொழியாக; பரலோகத்தின் தேவனானவர் எங்களுக்குக் காரியத்தைக் கைகூடி வரப்பண்ணுவார்; அவருடைய ஊழியக்காரராகிய நாங்கள் எழுந்து கட்டுவோம்; உங்களுக்கோவென்றால் எருசலேமிலே பங்குமில்லை பாத்தியமுமில்லை; உங்கள் பேர் விளங்க ஒன்றும் இல்லை என்று அவர்களுடனே சொன்னேன்.

ஆலயத்தைக் கட்டும்படி ஆவியில் ஒரு ஏவுதலைப் பெருகிறோம், தேவனே அந்த ஏவுதலைக் கொடுக்கிறவர். ஊழியர்கள் எழும்பி தேவனுடைய ஆலயத்தைக் கட்டும்படி தீர்மானிக்க வேண்டும். அப்பொழுது ஜனங்களின் ஆவியையும் தேவன் ஏவுவார். ஜனங்கள் தங்களின் கைகளைத் திடப்படுத்திக் கொண்டு எழும்புவார்கள்.

ஆலயம் கட்ட தேவபலமும் தைரியமும் தேவை

1 நாளாகமம் 28:10 இப்போதும் எச்சரிக்கையாயிரு; பரிசுத்த ஸ்தலமாக ஒரு ஆலயத்தைக் கட்டுவதற்குக் கர்த்தர் உன்னைத் தெரிந்துகொண்டார்; நீ திடன்கொண்டு அதை நடப்பி என்று சொன்னான்.

தேவன் உன்னைத் தெரிந்து கொண்டிருக்கிற படியால், திடன்கொண்டு அதை நடப்பி என்கிறார். ஆலயத்தினைக் கட்டும்படி சாலொமோனைக் கர்த்தர் தெரிந்துகொண்டது போல இன்றைக்கும் கர்த்தர் தமது ஊழியர்களை ஆலயத்தினைக் கட்டும்படி தெரிந்தெடுத்திருக்கிறார். ஒவ்வொரு மேய்ப்பனுக்குள்ளும் அந்த ஆற்றலை தேவன் வைத்திருக்கிறார். நாம் கட்ட எழுந்தால் தேவன் நம்மைக் கொண்டு கட்டி முடிப்பார்.

சிலர் நம்மால் ஆலயத்தைக் கட்ட முடியாது, யாராவது கட்டிக் கொடுத்தால் நாம் மேய்ப்பனாக இருந்து நன்றாக ஊழியம் செய்யலாம், ஆராதனை நடத்தலாம் என்று எண்ணுகிறதைப் பார்க்கிறோம். இப்படிப்பட்ட மேய்ப்பர்கள் ஆத்துமாக்களை பெற்றெடுத்து மந்தையில் சேர்ப்பதில்லை. பெற்றெடுக்கின்ற ஒவ்வொரு மேய்ப்பனுக்குள்ளும், சம்பாதித்த ஆடுகளுக்காக நல்ல தொழுவத்தை ஏற்படுத்துகின்ற ஆற்றலையும் தேவன் கொடுத்து ஆசீர்வதிக்கின்றார். அந்த ஆற்றல் அவர்களுக்குள் வந்துவிடுகிறது.

சிலர் வாடகை இடத்திலேயே காலங்களைக் கழித்து விட்டுப்போக நினைக்கிறார்கள். சில திருச்சபை களின் விசுவாசமே சொந்த இடத்தை வாங்கி ஆலயத்தைக் கட்டக்கூடாது என்பது. நான் ஏனென்று கேட்டபோது, பிற்காலத்தில் அது யாருக்குச் சொந்தம் என்ற பிரச்சனை வரும் அதை தவிர்க்கவே இந்த முடிவு என்றார்கள். ஆலயங்களைக் கட்ட ஆரம்பிக்கும் முன்னே, பங்கு போட நினைக்கிற பொல்லாத சுபாவத் தினை பிசாசானவன் அவர்கள் இருதயத்தில் விதைத்து விட்டான். ஆனால் வேதம் கூறுகிறது நல்ல மேய்ப்பன், நல்லமேய்ச்சல், நல்ல தொழுவம் என்று.

எசேக்கியேல் 34:13,14 அவைகளை ஜனங்க ளிடத்திலிருந்து புறப்படவும் தேசங்களிலிருந்து சேரவும் பண்ணி, அவைகளுடைய சுயதேசத்திலே அவை களைக் கொண்டுவந்து, இஸ்ரவேல் மலைகளின் மேலும் ஆறுகள் அண்டையிலும் தேசத்தின் சகல வாசஸ்தலங்களிலும் அவைகளை மேய்ப்பேன்.

14. அவைகளை நல்ல மேய்ச்சலிலே மேய்ப்பேன்; இஸ்ரவேலுடைய உயர்ந்த மலைகளில் அவைகளுடைய தொழுவம் இருக்கும்; அங்கே அவைகள் நல்ல தொழுவத்தில் படுத்துக்கொள்ளும், இஸ்ரவேலின் மலைகளின் மேல் நல்ல மேய்ச்சலை மேயும்.

இந்தப் புதிய ஏற்பாட்டுக் காலத்திலே; ஆடு களுக்கு நல்ல மேய்ப்பனை மட்டும் வாக்குப் பண்ணவில்லை, நல்ல மேய்ச்சலையும் வாக்குப் பண்ணியிருக்கிறார். அத்துடன் நல்ல தொழுவத்தைப் பற்றியும் பேசுகிறார். ஆடுகள் இறுதியாக ஒரு நல்ல பாதுகாப்பான தொழுவத்தில் கொண்டு வந்து அடைக்கப்பட்டால்தான் இரவிலே நிம்மதியாக தூங்க

முடியும். அதுபோல ஒரு திருச்சபை கட்டப்பட்டால்தான் அதன் அவயவமாய் இருக்கிற விசுவாசிகளுக்கும் ஒரு பாதுகாவலின் உணர்வு உண்டாகும். அது தீங்கிற்கு அவர்களின் மறைவிடமாய், இளைப்பாறுதலின் உறைவிடமாய், ஆபத்துக் காலத்திலே ஒரு அடைக்கலப் பட்டணமாய் இருக்கிறது. தொழுவம் என்று வேதம் கூறாமல் நல்ல தொழுவம் என்று வேதம் கூருகிறது. எனவே சிறந்த ஆலயங்களைக் கட்டுங்கள்.

1 நாளாகமம் 28:20 தாவீது தன் குமாரனாகிய சாலொமோனை நோக்கி; நீ பலங்கொண்டு தைரியமா யிருந்து, இதை நடப்பி; நீ பயப்படாமலும் கலங்காமலும் இரு; தேவனாகிய கர்த்தர் என்னும் என் தேவன் உன்னோடே இருப்பார்; கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுகிறதற்கடுத்த சகல கிரியைகளையும் நீ முடித்துத் தீருமட்டும், அவர் உன்னைவிட்டு விலகவுமாட்டார், உன்னைக் கைவிடவுமாட்டார்.

ஆகவேதான் தாவீது தன் குமாரனாகிய சாலொமோனைப் பார்த்து முதலாவது தேவனில் பலங்கொள் என்று கூறுகிறார். தேவனுடைய பலம் நமக்கு மிகவும் அவசியம். கர்த்தரிலும் அவரின் சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள், ஆவி யினாலேயே எல்லாம் ஆகும் என்று வேதம் கூறுகிறது. பரிசுத்த ஆவியானவர் உன்மேல் வருவார், உன்னத மானவரின் பெலன் உன்மேல் நிழலிடும் என்பது மரியாளுக்கு மட்டுமல்ல. நமக்கும்தான் ஆலயத்தைக் கட்ட விஷேசித்த பெலன் அவசியம். அதற்காகத்தான் பெசலெயேலையும் அகோலியாபையும் தேவன் விஷேசித்த ஆவியினால் நிறைத்தார். ஆலயத்தினைக் கட்டுவதற்குரிய விஷேசித்த அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்ளும்போது கட்டுவதற்குறிய தேவபெலனும் நம்மேல் வரும்.

இரண்டாவது தைரியமாயிருந்து காரியத்தை நடப்பி; ஆலயத்தைக் கட்ட தைரியப்படு என்று கூறுகிறார். தேவன் பேரிலுள்ள விசுவாசத்தினால், துணிச்சலுடன் காரியத்தினைத் துவங்க வேண்டும்.

மூன்றாவது பயப்படாதே; எதிர்ப்புகளைக் கண்டு சோர்ந்து போய்விடாதே, ஒரு கையிலே பட்டயத்தினைப் பிடித்துக்கொண்டு, ஒரு கையிலே அலங்கத்தைக் கட்டினவர்களை நினைவு கூற வேண்டும்.

நான்காவது காரியம் வாய்க்குமோ வாய்க் காதோ என்று கலக்கமடையாதே. கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுகிறதற்கடுத்த சகல கிரியைகளையும் நீ முடித்துத் தீருமட்டும், அவர் உன்னைவிட்டு விலகவு மாட்டார், உன்னைக் கைவிடவுமாட்டார் என்று வேதம் கூறுகிறது. ஆகவே நாம் ஒரே விசுவாசத்தினை உடைய வர்களாக இருக்க வேண்டும்.

தாவீது உத்தம இருதயத்தைத் தரும்படி தேவனை நோக்கி ஜெபிக்கிறதைப் பார்க்கிறோம்.

1 நாளாகமம் 29:19 என் குமாரனாகிய சாலொ மோன் உம்முடைய கற்பனைகளையும் உம்முடைய சாட்சிகளையும் உம்முடைய கட்டளைகளையும் கைக்கொள்ளும்படிக்கும், இவை எல்லாவற்றையும் செய்து, நான் ஆயத்தம்பண்ணின இந்த அரமனை யைக் கட்டும்படிக்கும், அவனுக்கு உத்தம இருதயத்தை தந்தருளும் என்றான்.

உத்தம இருதயம் உள்ள மனிதர்களையே தேவனுடைய கண்கள் நோக்கிப் பார்க்கிறது. தேவன் தமக்கென்று ஆலயத்தைக் கட்டும்படி மனிதர்களைத் தெரிந்தெடுக்கிறார். ஆசரிப்புக் கூடாரத்தைக் கட்டும்படி மோசேயைக் கர்த்தர் தெரிந்தெடுத்தார், தேவாலயத்தை கட்டும்படிக்கு சாலொமோனைக் கர்த்தர் தெரிந்

தெடுத்தார். இடிக்கப்பட்டுப்போன எருசலேம் மதிலையும் தேவாலயத்தையும் திரும்ப எடுத்துக் கட்டும்படிக்கு ஒரு நெகேமியாவைக் கர்த்தர் தெரிந்து கொண்டார். பிரதான ஆசாரியனாகிய யோசுவாவையும் செருபாபேலையும் ஆலயத்தை எடுப்பித்துக்கட்ட தேவன் தெரிந்து கொண்டார். இன்றைக்கும் புதிய ஏற்பாட்டின் திருச்சபைகளைக் கட்டும்படி மனிதர்களைத் தெரிந்து கொண்டு விஷேசித்த ஆவியை கொடுக்கிறார்.

யாத்திராகமம் 36:1 அப்பொழுது பரிசுத்த ஸ்தலத்துத் திருப்பணிகளுக்கடுத்த சகல வேலை களையும், கர்த்தர் கற்பித்தபடியெல்லாம், பெசலெ யேலும் அகோலியாபும், செய்ய அறியும்படிக்குக் கர்த்தரால் ஞானமும் புத்தியும் பெற்ற விவேக இருதய முள்ள மற்ற அனைவரும் செய்யத் தொடங்கினார்கள்.

2. பெசலெயேலையும் அகோலியாபையும், கர்த்தரால் ஞானமடைந்து அந்த வேலைகளைச் செய்ய வரும்படி தங்கள் இருதயத்தில் எழுப்புதலடைந்த ஞான இருதயத்தாராகிய எல்லாரையும், மோசே வர வழைத் தான்.

யாத்திராகமம் 35:30–34 பின்பு மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி; பாருங்கள், கர்த்தர் யூதாவின் கோத்திரத்தில் ஊரின் மகனான ஊரியின் குமாரன் பெசலெயேலைப் பெயர் சொல்லி அழைத்து,

31. அவன் விசித்திரமான வேலைகளை யோசித்துச் செய்யவும், பொன்னிலும் வெள்ளியிலும் வெண்கலத்திலும் வேலைசெய்யவும்,

32. இரத்தினங்களை முத்திரை வெட்டாக வெட்டிப் பதிக்கவும், மரத்தில் சித்திர வேலைசெய்து சகல விநோதமான வேலைகளைச் செய்யவும்,

33. அவனுக்கு ஞானத்தையும் புத்தியையும்

அறிவையும் அருளி, அவன் சகலவித வேலைகளையும் செய்யும்படி தேவ ஆவியினாலே அவனை நிரப்பினார்.

34. அவன் இருதயத்திலும், தாண் கோத்திரத்து அகிசாமாகின் குமாரனாகிய அகோலியாபின் இருதயத்திலும், போதிக்கும் வரத்தையும் அருளினார்.

யாத்திராகமம் 38 : 23 அவனோடேகூடத் தாண் கோத்திரத்து அகிசாமாகின் குமாரனாகிய அகோலியாப் சித்திரக் கொத்து வேலைக்காரனும், விநோத வேலைகளைச் செய்கிற தொழிலாளியும், இளநீல நூலாலும் இரத்தாம்பர நூலாலும் சிவப்பு நூலாலும் மெல்லிய பஞ்சு நூலாலும் சித்திரத் தையல் வேலை செய்கிறவனுமாயிருந்தான்.

பெசலெயேலையும் அகோலியாபையும் பெயர் சொல்லி அழைத்தார் என்று பார்க்கிறோம். அழைக்கப்பட்ட அவர்களுக்கு தேவனே சகல வேலைகளையும் யோசித்து செய்கிறதற்கு வேண்டிய ஞான இருதயத்தைக் கொடுத்தார். தேவ ஆவியினாலே அவர்களை நிரப்பினார். அவன் எழுந்து கட்டினது மட்டுமல்ல, மற்றவர்களுக்கும் போதிக்கும்படியான ஆற்றலையும் தேவன் தந்தருளினார். அவனோடு இணைந்து எல்லாரும் கட்டினார்கள்.

யாத்திராகமம் 25:40 மலையிலே உனக்குக் காண்பிக்கப்பட்ட மாதிரியின்படியே அவைகளைச் செய்ய எச்சரிக்கையாயிரு.

1 நாளாகமம் 28 : 19 இந்த மாதிரியின்படி சகல வேலைகளும் எனக்குத் தெரியப்படுத்த, இவையெல்லாம் கர்த்தருடைய கரத்தினால் எனக்கு எழுதிக் கொடுக்கப்பட்டது என்றான்.

தேவனுடைய ஆலயம் தேவனுடைய விருப்பப்படி கட்டப்படவேண்டும். தேவன் மாதிரியை மோசேக்கும்,

தாவீதுக்கும் காண்பித்ததைப் பார்க்கிறோம். தேவன் இன்றைக்கும் நாம் தேவனுடைய ஆலயத்தினை எப்படி எங்கு கட்டவேண்டும் என்று நமக்கும் ஆவியிலே அதை வெளிப்படுத்துவார். கர்த்தரால் ஞானம் பெற்றவர்கள் ஆலய வேலையைச் செய்யத் தொடங்கினார்கள்.

அந்நிய நாட்டு இராஜாக்களையும் தேவாலயத்தை எடுப்பித்துக் கட்டுகிற வேலையில் தேவன் பயன் படுத்துகிறார்.

எஸ்றா 1:1,2 எரேமியாவின் வாயினாலே கர்த்தர் சொன்ன வார்த்தை நிறைவேறும்படி, பெர்சியா வின் ராஜாவாகிய கோரேசின் முதலாம் வருஷத்திலே கர்த்தர் பெர்சியாவின் ராஜாவாகிய கோரேசின் ஆவியை ஏவினதினாலே அவன்;

2. பரலோகத்தின் தேவனாகிய கர்த்தர் பூமியின் ராஜ்யங்களையெல்லாம் எனக்குத் தந்தருளி, யூதாவிலுள்ள எருசலேமிலே தமக்கு ஆலயத்தைக் கட்டும்படி எனக்குக் கட்டளையிட்டிருக்கிறார்.

அந்நிய நாட்டு ராஜாக்களையும் எருசலேமின் அலங்கத்தையும் தேவாலயத்தையும் எடுப்பிக்கிற வேலையில் தேவன் பயன்படுத்தியிருக்கிறார் என்று பார்க்கிறோம். உதாரணமாக கோரேஸ் ராஜாவின் ஆவியை தேவன் ஏவுகிறார்.

எனவே கோரேஸ் சொல்லுகிறார்; பரலோகத்தின் தேவனானவர் தமக்கு ஒரு ஆலயத்தைக் கட்டும்படி எனக்குக் கட்டளையிட்டிருக்கிறார் என்று. தேவன் கோரேசிடம் பேசினபடி, கோரேஸ் தனது ஜனங்களுக்கு பரலோகத்தின் தேவனுக்கு ஆலயம் கட்டும்படி கட்டளையிட்டான்.

எஸ்றா 1:3,4 அவருடைய ஜனங்கள் எல்லாரிலும் எவன் உங்களுக்குள் இருக்கிறானோ,

அவனோடே அவனுடைய தேவன் இருப்பாராக; அவன் யூதாவிலுள்ள எருசலேமுக்குப் போய், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டக்கடவன்; எருசலேமில் வாசம்பண்ணுகிற தேவனே தேவன்.

4. அந்த ஜனங்களில் மீதியாயிருக்கிறவன் எவ்விடத்தில் தங்கியிருக்கிறானோ, அவ்விடத்து ஜனங்கள் எருசலேமிலுள்ள தேவனுடைய ஆலயத்திற்கென்று அவனிடத்தில் உற்சாகமாய்க் காணிக்கை கொடுத்து அனுப்புகிறதுமன்றி, அவனுக்குப் பொன் வெள்ளி முதலிய திரவியங்களையும், மிருக ஜீவன்களையும் கொடுத்து, உதவிசெய்ய வேண்டும் என்று பெர்சியாவின் ராஜாவாகிய கோரேஸ் அறிவிக்கிறார் என்று, தன் ராஜ்யம் எங்கும் எழுதியனுப்பி விளம்பரம் பண்ணுவித்தான்.

ஏசாயா 44:28 கோரேசைக் குறித்து: அவன் என் மேய்ப்பன்; அவன் எருசலேமை நோக்கி நீ கட்டப்படு என்றும்; தேவாலயத்தை நோக்கி; நீ அஸ்திபாரப்படு என்றும் சொல்லி, எனக்குப் பிரியமானதையெல்லாம் நிறைவேற்றுவான் என்று சொல்லுகிறவர் நான்.

கோரேஸ் தனக்குப் பிரியமானதையெல்லாம் செய்வான் என்று தேவனே சாட்சி கொடுக்கிறார். கோரேஸ் ராஜா இஸ்ரவேல் கோத்திரங்களுக்கு உட்பட்ட வனல்ல. ஆனாலும் அவன் நீடித்த ஆயுளுடன் சுபிட்சமாய் வாழும்படி பரலோகத்தின் தேவனை கனம் பண்ணினான்.

ஒரு ராஜா நன்றாக இருக்க வேண்டுமானால் தேவாதி தேவனை, இயேசு ராஜாவைக் கனம் பண்ணி அவருக்குப் பிரியமானதைச் செய்தே தீர வேண்டும், ஏனெனில் அவர் மனிதர்களின் மத்தியில் ஆளுகை செய்கிற தேவன். மனிதனுக்கு ஆளுகையைக் கொடுக்கிறவர். இராஜாக்களைத் தள்ளி ராஜாக்களை

ஏற்படுத்துகிறவர். இதை நேபுகாத்நேச்சார் காலத்தில் தேவன் வெளியறங்கமாக்கி காண்பித்திருக்கிறதைப் பார்க்கிறோம்

ஏசாயா 45:4 வெண்கலக் கதவுகளை உடைத்து, இருப்புத்தாழ்ப்பாள்களை முறித்து, அந்தகாரத்தில் இருக்கிற பொக்கிஷங்களையும், ஒளிப்பிடத்தில் இருக்கிற புதையல்களையும் உனக்குக் கொடுப்பேன்; நான் என் தாசனாகிய யாக்கோபினிமித்தமும், நான் தெரிந்துகொண்ட இஸ்ரவேலினிமித்தமும், நான் உன்னைப் பெயர் சொல்லி அழைத்து, நீ என்னை அறியாதிருந்தும், உனக்கு நாமம் தரித்தேன்.

ஏன் தேவன் கோரேஸிக்கு பொக்கிஷங்களையும் புதையல்களையும் கொடுத்தார் என்றால், தேவனுடைய ஆலயத்தைக் கட்டுவதற்காகவே. அவன் தேவனை அறியாதவனாயிருந்தும் அவர் அவனை அழைத்து அவனுக்கு அவர் நாமத்தைத் தரித்தார் என்று பார்க்கிறோம்.

இராஜாக்களுடைய இருதயத்தை கர்த்தர் தம்முடைய மக்கள் பக்கம் சார்ந்திருக்கப் பண்ணினார்

எஸ்றா 6:22 புளிப்பில்லாத அப்பப்பண்டிகையை ஏழுநாளாகச் சந்தோஷத்துடனே ஆசரித்தார்கள்; கர்த்தர் அவர்களை மகிழ்ச்சியாக்கி, அவர்கள் கைகளை இஸ்ரவேலின் தேவன் என்னும் தேவனுடைய ஆலயத்தின் வேலையிலே பலப்படுத்தத்தக்கதாய் அசீரியருடைய ராஜாவின் இருதயத்தை அவர்கள் பட்சத்தில் சார்ந்திருக்கப்பண்ணினார்.

இராஜாக்களுடைய இருதயத்தை நீர்க்கால்களைப்போல் திருப்புகிற தேவன். இராஜாக்களுடைய இருதயங்களை தேவன் நம் பட்சத்தை சார்ந்திருக்கும் படி செய்கிறவர்.

தேவன் ஆலயத்தின் தேவைகளையெல்லாம் சந்திக்கிறவர்

ஜனங்களை கொடுக்கும்படி செய்கிறவர்

4 **யாத்திராகமம் 36:3** அவர்கள், இஸ்ரவேல் புத்திரர் திருப்பணிக்கடுத்த சகல வேலைகளுக்காகவும் கொண்டுவந்த காணிக்கைப்பொருள்களை யெல்லாம், மோசேயினிடத்தில் வாங்கிக்கொண்டார்கள். பின்னும் ஜனங்கள் காலைதோறும் தங்களுக்கு இஷ்டமான காணிக்கைகளை அவனிடத்தில் கொண்டு வந்தார்கள்.

ஆலயவேலைகளை நாம் தேவனுடைய திட்டத்தின்படி செய்ய ஆரம்பிக்கும்போது, அதன் முழுத் தேவைகளுக்கும் உரிய பணம் நம் கையில் இல்லையே என்று கவலைப்படத் தேவையில்லை. நாம் விசுவாசத்துடன் துவக்கும்போது ஜனங்கள் தங்களுக்கு இஸ்டமான காணிக்கைகளைக் காலைதோறும் கொண்டுவருவார்கள் வேதத்தில் காலைதோறும் கொண்டுவந்தார்கள் என்று பார்க்கிறோம். தமது ஜனங்களையும் தேசத்தில் ஆளுகை செய்கிறவர்களையும் காணிக்கைகளைக் கொண்டுவரும்படி தேவன் அவர்களுக்கு கட்டளையிடுகிறவர்.

யாத்திராகமம் 36:7 செய்ய வேண்டிய எல்லா வேலைகளுக்கும் போதுமான பொருள்கள் இருந்தது மல்லாமல் அதிகமாயும் இருந்தது.

தேவன் வேலை செய்வதற்கு மட்டுமல்ல, கொடுப்பதற்கும் ஜனங்களின் ஆவியை ஏவினார். அவர்கள் ஏராளமான காணிக்கைகளைக் கொண்டு வந்தார்கள், வேலை செய்யப்போதுமானதற்கும் அதிகமாயிருந்தது. எனவே போதும் என்ற அறிவிப்பை

மோசே ஜனங்களிடம் அறிவித்தார்; நம்முடைய தேவன் (போதுமானவருக்கும் மிகவும் அதிகமானவர்) ஏல்ஷடாய்.

யாத்திராகமம் 35:21,22 பின்பு எவர்களை அவர்கள் இருதயம் எழுப்பி, எவர்களை அவர்கள் ஆவி உற்சாகப்படுத்தினதோ, அவர்கள் எல்லாரும் ஆசரிப்புக் கூடாரத்தின் வேலைக்கும், அதின் சகல ஊழியத்துக்கும், பரிசுத்த வஸ்திரங்களுக்கும் ஏற்றவைகளைக் கர்த்தருக்குக் காணிக்கையாகக் கொண்டு வந்தார்கள்.

22. மனப்பூர்வமுள்ள ஸ்திரீ புருஷர் யாவரும், அஸ்தகடகங்கள், காதணிகள், மோதிரங்கள், ஆரங்கள் முதலான சகலவித பொன்னாபரணங்களையும் கொண்டுவந்தார்கள்; கர்த்தருக்குக் காணிக்கை செலுத்தின ஒவ்வொருவனும் பொன்னைக் காணிக்கை யாகச் செலுத்தினான்.

பொன்னைக் காணிக்கையாக செலுத்தும்படி தேவன் அவர்கள் உள்ளத்தை ஏவினார். யாரோ ஒருவன் மட்டும் பொன்னைக் கொண்டுவரவில்லை, காணிக்கையைக் கொண்டுவந்த ஒவ்வொருவனும் பொன்னைக் காணிக்கையாக கொண்டுவந்தார்கள். காணிக்கைகளைக் கொண்டுவந்த ஜனங்கள் எல்லாரும் மனப்பூர்வமாய்க் கொண்டு வந்தார்கள்.

ஏசாயா 43:6,7 நான் வடக்கை நோக்கி: கொடு என்றும் தெற்கை நோக்கி: வைத்திராதே என்றும் சொல்லி தூரத்திலிருந்து என் குமாரரையும், பூமியின் கடையாந்தரத்திலிருந்து என் குமாரத்திகளையும்,

7. நான் என் மகிமைக்கென்று சிருஷ்டித்து உருவாக்கிப்படைத்து, என் நாமந்தரிக்கப்பட்ட யாவரையும் கொண்டுவா என்பேன்.

கர்த்தர் தம் நாமம் தரிக்கப்பட்ட இரட்சிக்கப் பட்டவர்கள் ஒவ்வொருவரையும் நோக்கி தம்முடைய ஆலயத்திற்கென்று காணிக்கைகளைக் கொண்டுவரும்படி கட்டளையிடுகிறவர். நாம் தேவனுடைய நாமத்தின் மகிமைக்கென்று சிருஷ்டித்து உருவாக்கப்பட்ட ஜனங்கள் தேவனுடைய நாமத்தின் மகிமைக்கென்று நாம் கொடுக்க வேண்டும்.

ஏசாயா 60:9 தீவுகள் எனக்குக் காத்திருக்கும்; அவர் உன்னை மகிமைப்படுத்தினார் என்று உன் பிள்ளைகளையும், அவர்களோடேகூட அவர்கள் பொன்னையும், அவர்கள் வெள்ளியையும் உன் தேவனாகிய கர்த்தரின் நாமத்துக்கென்றும்; இஸ்ரவேலின் பரிசுத்தருக்கென்றும், தூரத்திலிருந்து கொண்டுவர, தர்ஷீசின் கப்பல்களும் ஏற்கனவே எனக்குக் காத்திருக்கும்.

கர்த்தர் நம்மை மகிமைப்படுத்தும்பொழுது, தூரத்திலிருக்கிற மனிதர்களும் பொன்னையும் வெள்ளியையும் காணிக்கையாக கொண்டு வருவார்கள். ஏற்கனவே அவைகள் நமக்காக காத்துக்கொண்டிருக்கிறது. காணிக்கைகளைத் தேடி நாம் ஓட வேண்டியதில்லை. நாம் தேவனுடைய திட்டத்தில் இருக்கும்போது காணிக்கைகள் நம்மைத் தேடி ஓடிவரும்.

ஏசாயா 66:20 இஸ்ரவேல் புத்திரர் சுத்தமான பாத்திரத்தில் காணிக்கையைக் கர்த்தருடைய ஆலயத்துக்குக் கொண்டு வருகிறதுபோல, உங்கள் சகோதரரெல்லாரையும் அவர்கள் குதிரைகளின்மேலும், இரதங்களின்மேலும், குலாரி வண்டிகளின்மேலும், கோவேறு கழுதைகளின்மேலும், வேகமான ஒட்டகங்களின் மேலும், சகல ஜாதிகளிடத்திலுமிருந்து எருசலேமிலுள்ள கர்த்தருக்குக் காணிக்கையாக என்

பரிசுத்த பர்வதத்துக்குக் கொண்டு வருவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஏசாயா 18:7 ...சேனைகளின் கர்த்தரின் நாமம் தங்கும் ஸ்தலமாகிய சீயோன் மலையில், சேனைகளின் கர்த்தருக்குக் காணிக்கையாகக் கொண்டுவரப்படும்.

பரிசுத்தாவியானவரால் உண்டாகும் அசைவு பலமான ஆசீர்வாதங்களை கொண்டுவரும்

ஆகாய் 2:5,6,8 நீங்கள் எகிப்திலிருந்து புறப்படுகிறபோது நான் உங்களோடே உடன்படிக்கை பண்ணின வார்த்தையின்படியே, என் ஆவியானவரும் உங்கள் நடுவில் நிலை கொண்டிருப்பார்; பயப்படாதேயுங்கள்.

6. சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் கொஞ்சக் காலத்துக்குள்ளே இன்னும் ஒருதரம் நான் வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் வெட்டாந்தரையையும் அசையப்பண்ணுவேன்.

8. வெள்ளியும் என்னுடையது, பொன்னும் என்னுடையது என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

உண்டாக்கப்பட்டதெல்லாம் கர்த்தருடையது, அதை தமக்கென்று உருவாக்கினார். கர்த்தருடையதெல்லாம் மனிதனுக்குரியது. பிசாசுக்கு இந்த பூமியில் ஒரு கிராம் தங்கம்கூட கிடையாது. வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் வெட்டாந்தரையையும் இன்னும் ஒருவிசை அசையப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். அசையப்பண்ணுதல் என்றால், மக்களை கொடுக்கும்படி செய்தலாகும்.

அப்போஸ்தலர் 4:33–34 கர்த்தராகிய இயேசுவின் உயிர்த்தெழுதலைக்குறித்து அப்போஸ்தலர்கள் மிகுந்த

பலமாய்ச் சாட்சிகொடுத்தார்கள்; அவர்களெல்லார் மேலும் பூரண கிருபை உண்டாயிருந்தது.

34. நிலங்களையும், வீடுகளையும் உடையவர்கள் அவைகளை விற்று, விற்கப்பட்டவைகளின் கிரயத்தைக் கொண்டுவந்து, அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தார்கள்.

அப்போஸ்தல நடபடிகளில் வாசிக்கிறோம், அவர்கள் கூடியிருந்த இடம் அசைந்தது என்று; அதன் பொருள் ஜனங்களின் இருதயமும் மனமும் மாறினது. வீடுகளையும் நிலங்களையும் உடையவர்கள் அவைகளை விற்று விற்கப்பட்டதன் கிரயத்தொகையை அப்போஸ்தலர்களின் பாதத்தில் கொண்டு வந்து வைத்தார்கள். அவர்கள் எல்லார் மேலும் பூரண கிருபை உண்டாயிருந்தது, கர்த்தரின் கிருபை நமக்கு வேண்டிய ஐசுவரியத்தைக் கொண்டுவரும்.

புதிய ஏற்பாட்டுக் காலத்திலே தேவன் ஆவியானவரைக் கொண்டு பல இடங்களில் பலத்த அசைவைக்கட்டளையிட்டிருக்கிறதைப் பார்க்கிறோம். அங்கேயெல்லாம் ஜனங்களுக்குள் மாற்றங்கள் உண்டானது.

ஒவ்வொருவரும் கொண்டுவந்து கொடுக்கும் படி ஆவியானவர் கிரியை நடப்பிக்கிறதைப் பார்க்கி றோம். எல்லோரும் கொண்டுவந்து அப்போஸ்தலர் களுடைய பாதத்திலே வைத்தார்கள். அப்போஸ்தலர்கள் எவரும் ஒவ்வொருவரும் எவ்வளவு கொண்டுவந்தார்கள் என்று எண்ணிப்பார்க்கவில்லை. ஆனால் தேவ ஆவியானவர் அதைத் துள்ளியமாகக் கணக்கிட்டு, ஆறுதலின் மகன் பர்னபா கொடுத்ததையும், வஞ்சகன் அனனியா கொடுத்ததையும் கூறுகிறார். அனனியாவின் காணிக்கையை பேதுரு எண்ணிப்பார்க்கவில்லை, ஆனால் பரிசுத்த ஆவியானவர் எண்ணிப்பார்த்து,

பேதுருவுக்கு அதை வெளிப்படுத்தி விடுகிறார். அங்கே ஒரு நியாயத்தீர்ப்பே நடந்து விடுகிறதைப் பார்க்கிறோம்.

ஒரு வேலை மனிதர்கள் இப்படியும் நினைக்கலாம், ஆவியானவர் இப்படியா கணக்குப் பார்ப்பதென்று. அநேகர் அதிகமாய், உதாரணத்துவமாய், தேவன் கட்டளையிட்ட அசைவின்படி கொடுத்தார்கள். அவர்களுக்கு தேவன் கணக்கிட்டு ஆசீர்வாதங்களை கொடுக்கவில்லையென்றால் அநீதி பரராய்ப் போய்விடுவார். ஆகவே மனிதர்கள் செலுத்துகிற ஒவ்வொரு காணிக்கைகளையும் ஆவி யானவர் அளந்து பார்க்கிறார்.

எல்லாம் உம்மால் உண்டானது உமது கரத்திலிருந்து வாங்கி உமக்கு கொடுத்தோம் என்று பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள் கூறுகிறதைப் பார்க்கிறோம். நம்மிடத்திலுள்ளது எல்லாம் கர்த்தருடையது, அதை தேவன் ஒரு தெய்வீக நோக்கத்திற்காகவே நமக்குத் தந்திருக்கிறார். அதைப் பரிசுத்த ஆவியானவர் தெய்வீகமான நோக்கத்திற்காக கொடுக்கும்படி உங்களிடம் கூறும்போது அதில் கள்ளத்தனம் பண்ணக்கூடாது. ஆவியானவர் அங்கே ஒரு அசைவைக் கட்டளையிட்டிருக்கிறதைப் பார்க்கிறோம், அதற்கு இசைவாய் நாம் நடக்க வேண்டும்.

கொஞ்சக் காலத்துக்குள்ளே இன்னும் ஒருதரம் நான் வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் வெட்டாந்தரையையும் அசையப்பண்ணுவேன் என்றால், உயரே வானத்திலிருந்து உண்டாகும் ஆசீர்வாதத்தினாலும் கீழே ஆழத்திலிருந்து உண்டாகும் ஆசீர்வாதத்தினாலும் உன்னை ஆசீர்வதிப்பார் என்ற வார்த்தையின்படி ஆசீர்வாதங்களை நம்மை நோக்கி வரவிடுவார்.

உபாகமம் 33:13-16 யோசேப்பைக்குறித்து: கர்த்தரால் அவனுடைய தேசம் ஆசீர்வதிக்கப்படுவதாக; அது வானத்தின் செல்வத்தினாலும், பனியினாலும், ஆழத்திலுள்ள நீரூற்றுகளினாலும்,

14. சூரியன் பக்குவப்படுத்தும் அருமையான கனிகளினாலும், சந்திரன் பக்குவப்படுத்தும் அருமையான பலன்களினாலும்,

15. ஆதிபர்வதங்களில் உண்டாகும் திரவியங்களினாலும், நித்திய மலைகளில் பிறக்கும் அரும்பொருள்களினாலும்,

16. நாடும் அதின் நிறைவும் கொடுக்கும் அருமையான தானியங்களினாலும் ஆசீர்வதிக்கப்படுவதாக. முட்செடியில் எழுந்தருளினவரின் தயை யோசேப்புடைய சிரசின்மேலும், தன் சகோதரரில் விசேஷித்தவனுடைய உச்சந்தலையின் மேலும் வருவதாக,

மேலே சொல்லப்பட்ட ஆசீர்வாதங்களை எல்லாம் தேவன் நம்மேல் வரப்பண்ணுகிறவர். ஆகவே ஆகாய்த்தீர்க்கதரிசியைக் கொண்டு உரைத்தது போல் ஒரு பொருளாதார அசைவை தேவன் இந்த நாட்களில் கட்டளையிடுவாராக.

ஜனங்களை அசையப்பண்ணி, சூழ்நிலையை அசையப்பண்ணி ஆசீர்வாதங்களை நம் மத்தியில் கொண்டுவரப்பண்ண புதிய உடன்படிக்கையின் ஆவியானவர் நம் மத்தியில் இருக்கிறார்.

எப்படியெல்லாம் இராஜாக்களும், ஜனங்களும் காணிக்கைகளை செலுத்தினார்கள்

5

தாவீதினுடைய காணிக்கை

தாவீது தேவனுடைய ஆலயத்தின்மேல் வைத்திருந்த வாஞ்சையினால், ஏராளமான பொருட்களை சவதரித்தது மட்டுமின்றி, தனக்குச் சொந்தமானவைகளையும் ஏராளம் கொடுத்தான்.

1 நாளாகமம் 22:5,14 தாவீது; என் குமாரனாகிய சாலொமோன் வாலிபனும் இளைஞனுமாயிருக்கிறான்; கர்த்தருக்குக் கட்டப்படும் ஆலயம் சகல தேசங்களிலும் கீர்த்தியும் மகிமையும் உடையதாய் விளங்கும்படி மகா பெரியதாயிருக்க வேண்டும்; ஆகையால் அதற்காக வேண்டியவைகளை இப்பொழுதே சேகரம் பண்ண வேண்டும் என்று சொல்லி, தாவீது தன் மரணத்திற்கு முன்னே திரளாய்ச் சவதரித்து வைத்தான்.

14. இதோ, நான் என் சிறுமையிலே கர்த்தருடைய ஆலயத்திற்காக ஒரு லட்சம் தாலந்து பொன்னையும், பத்துலட்சம் தாலந்து வெள்ளியையும், நிறுத்து முடியாத திரளான வெண்கலத்தையும் இரும்பையும் சவதரித்தும், மரங்களையும் கற்களையும் சவதரித்தும் வைத்தேன்; நீ இன்னும் அவைகளுக்கு அதிகமாய்ச் சவதரிப்பாய்.

1 நாளாகமம் 29:2,4 நான் என்னாலே இயன்ற மட்டும் என் தேவனுடைய ஆலயத்துக்கென்று பொன் வேலைக்குப் பொன்னையும், வெள்ளி வேலைக்கு வெள்ளியையும், வெண்கலவேலைக்கு வெண்கலத்தையும், இரும்புவேலைக்கு இரும்பையும், மரவேலைக்கு மரத்தையும், பதிக்கப்படத்தக்க காந்தியுள்ள கற்களையும், பலவருணக்கற்களையும், விலையேறப்

பெற்ற சகலவித ரத்தினங்களையும், வெண்கற்பாளங் களையும், கோமேதக முதலியகற்களையும் ஏராளமாய்ச் சவதரித்தேன்.

தாவீது தேவனுடைய ஆலயத்தைக் கட்ட வேண்டும் என்ற வாஞ்சையினாலே ஏராளமாய்ச் சவதரித்து வைத்தான். தேவன் பண்டசாலையை உடையவர். தேவனுடைய ஆலயத்திலும் பண்டசாலை இருந்தது, எனவே பொருட்களை நாம் சவதரித்து சேர்த்து வைப்பது தவரல்ல. தாவீது தான் சவதரித்து வைத்தது மட்டுமல்ல தன் குமாரனை நோக்கி, நீ இன்னும் ஏராளமாய்ச் சவதரிப்பாய் என்று கூறுகிறார்.

3.இன்னும் என் தேவனுடைய ஆலயத்தின் மேல் நான் வைத்திருக்கிற வாஞ்சையினால், பரிசுத்த ஆலயத்துக்காக நான் சவதரித்த அனைத்தையும் தவிர, எனக்குச் சொந்தமான பொன்னையும் வெள்ளி யையும் என் தேவனுடைய ஆலயத்துக்கென்று கொடுக்கிறேன்.

4.அறைகளின் சுவர்களை மூடுவதற்காகவும், பொன் வேலைக்குப் பொன்னும், வெள்ளி வேலைக்கு வெள்ளியும் உண்டாயிருக்கிறதற்காகவும், கம்மாளர் செய்யும் வேலை அனைத்திற்காகவும், ஓப்பீரின் தங்கமாகிய மூவாயிரம் தாலந்து தங்கத்தையும், சுத்த வெள்ளியாகிய ஏழாயிரம் தாலந்து வெள்ளியையும் கொடுக்கிறேன்.

தாவீது தேவனுடைய ஆலயத்தின் மேல் வைத்திருந்த வாஞ்சையினால் எனக்குச் சொந்தமான பொன்னையும் வெள்ளியையும் என் தேவனுடைய ஆலயத்துக்கென்று கொடுக்கிறேன் என்கிறார். அவன் சுத்த வெள்ளியையும், ஓப்பீரின் தங்கத்தையும் காணிக்கையாக செலுத்தினான்.

தேவன் ஜனங்களுக்கு கொடுக்கும் திராணியை உண்டாக்கினார்

எஸ்றா 1:4 அந்த ஜனங்களில் மீதியா யிருக்கிறவன் எவ்விடத்தில் தங்கியிருக்கிறானோ, அவ்விடத்து ஜனங்கள் எருசலேமிலுள்ள தேவனுடைய ஆலயத்துக்கென்று அவனிடத்தில் உற்சாகமாய்க் காணிக்கை கொடுத்தனுப்புகிறதுமன்றி, அவனுக்குப் பொன் வெள்ளி முதலிய திரவியங்களையும், மிருக ஜீவன்களையும் கொடுத்து, உதவி செய்ய வேண்டும் என்று பெர்சியாவின் ராஜாவாகிய கோரேஸ் அறிவிக் கிறார் என்று தன் ராஜ்யமெங்கும் எழுதியனுப்பி விளம்பரம் பண்ணுவித்தான்.

1 நாளாகமம் 29 : 14 இப்படி மனப்பூர்வமாய்க் கொடுக்கும் திராணி உண்டாவதற்கு நான் எம்மாத்திரம்? என் ஜனங்கள் எம்மாத்திரம்? எல்லாம் உம்மால் உண் டானது; உமது கரத்தில் வாங்கி உமக்குக் கொடுத்தோம்.

தாவீது மட்டுமல்ல ஜனங்களும் மன உற்சாகத்துடன் காணிக்கைகளைக் கொண்டுவந்தார்கள்.

யாத்திராகமம் 35 : 29 செய்யப்படும்படி கர்த்தர் மோசேயைக் கொண்டு கற்பித்த வேலைக்குரிய யாவை யும் கொண்டுவர, இஸ்ரவேல் புத்திரருக்குள் தங்கள் இருதயத்தில் உற்சாகமடைந்த ஸ்திரி புருஷர் யாவரும் கர்த்தருக்குக் காணிக்கையை மனப்பூர்வமாய்க் கொண்டு வந்தார்கள்.

1 நாளாகமம் 29:5–9,14 இப்போதும் உங்களில் இன்றையதினம் கர்த்தருக்குத் தன் கைக்காணிக் கைகளைச் செலுத்த மனப்பூர்வமானவர்கள் யார் என்றான்.

6. அப்பொழுது வம்சங்களின் பிரபுக்களும், இஸ்ரவேல் கோத்திரங்களின் பிரபுக்களும், ஆயிரம்

பேருக்கு அதிபதிகளும், நூறுபேருக்கு அதிபதிகளும், ராஜாவின் வேலைக்காரராகிய பிரபுக்களும் மனப்பூர்வ மாய்,

7. தேவனுடைய ஆலயத்து வேலைக்கு ஐயாயிரம் தாலந்து பொன்னையும், பதினாயிரம் தங்கக்காசையும், பதினாயிரம் தாலந்து வெள்ளி யையும், பதினெண்ணாயிரம் தாலந்து வெண்கலத் தையும், லட்சம் தாலந்து இரும்பையும் கொடுத்தார்கள்.

8. யார் கையில் ரத்தினங்கள் இருந்ததோ, அவர்கள் அவைகளையும் கர்த்தருடைய ஆலயத்துப் பொக்கிஷத்திற்கென்று கெர்சோனியனான யெகியேலின் கையிலே கொடுத்தார்கள்.

9. இப்படி மனப்பூர்வமாய்க் கொடுத்ததற்காக ஜனங்கள் சந்தோஷப்பட்டார்கள்; உத்தம இருதயத் தோடே உற்சாகமாய்க் கர்த்தருக்குக் கொடுத்தார்கள்; தாவீது ராஜாவும் மிகவும் சந்தோஷப்பட்டான்.

14. இப்படி மனப்பூர்வமாய்க் கொடுக்கும் திராணி உண்டாவதற்கு நான் எம்மாத்திரம்? என் ஜனங்கள் எம்மாத்திரம்? எல்லாம் உம்மால் உண்டானது; உமது கரத்திலே வாங்கி உமக்குக் கொடுத்தோம்.

எஸ்றா 2:68 வம்சங்களின் தலைவரில் சிலர் எருசலேமிலுள்ள கர்த்தருடைய ஆலயத்துக்கு வந்த போது, தேவனுடைய ஆலயத்தை அதின் ஸ்தானத்திலே எடுப்பிக்கும்படிக்கு, அதற்காக மன உற்சாகமாய்க் காணிக்கைகளைக் கொடுத்தார்கள்.

தாவீது கொடுத்தது மட்டுமல்ல ஒவ்வொரு வரும் உற்சாகமாயும் மனப்பூர்வமாயும் கொடுத்தார்கள். தங்களின் கரத்திலிருக்கும் ஐசுவரியம் எல்லாம் கர்த்தரிடத்தில் இருந்து பெற்றுக்கொண்டது, கர்த்தரின்

தயையினால் உண்டானது என்பதை நன்கு அறிந்திருந்தபடியால்; எல்லாம் உம்மால் உண்டானது; உமது கரத்திலே வாங்கி உமக்குக் கொடுத்தோம் என்று அறிக்கையிட்டுக் கொடுத்தார்கள்.

ஆகாய் 2:19 நான் இன்று முதல் உங்களை ஆசீர்வதிப்பேன் என்று சொல்லுகிறார் என்றான்.

நாம் தேவனுடைய ஆலயத்திற்கென்று கொடுக்கும்போது, இன்று முதல் நான் உன்னை ஆசீர்வதிப்பேன் என்று கர்த்தர் கூறுகிறார்.

கொடுப்பதில் பெரிய அளவுகோலைப் பயன்படுத்தவேண்டும்

2 கொரிந்தியர் 9:7–10 அவனவன் விசன மாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்த படியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிற வனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்.

கொடுப்பது சிலருக்கு விசனமாயிருக்கிறதைப் பார்க்கிறோம், ஏனெனில் கொடுப்பதினால் என்ன நடக்கிறது என்ற அறிவின்மையே காரணம். நமக்கு சம்பூரணம் உண்டாகும்படியே வேதம் கொடுக்கும்படி கூறுகிறது. கொடுப்பதைப்பற்றி வேதம் கூறும்போது அதை விதைப்பு என்று கூறுகிறது. கண்ணீரோடே விதைக்கிறவர்கள் கெம்பீரத்தோடே அறுப்பார்கள். பெருக விதைக்கும்போது பெருக அறுப்போம். விதைக் கிறவன் ஒவ்வொரு விதையாக எடுத்துப்போடமாட்டான் அள்ளித்தூவுகிறான். அள்ளித்தூவும் விதையை சுமக்கிறவன் அழுதுகொண்டு போகிறான். ஆனாலும் தான் அறுத்த அரிகளை சுமந்து கொண்டு கெம்பீரத் தோடே திரும்பிவருவான் என்று வேதம் கூறுகிறது. நிச்சயமாகவே விதைக்கிற நமக்கு ஒரு அறுவடை உண்டு.

8.மேலும், நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணமுடையவர்களாயும், சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயுமிருக்கும் படியாக, தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபை யையும் பெருகச்செய்ய வல்லவராயிருக்கிறார்.

9.வாரியிறைத்தான், ஏழைகளுக்குக் கொடுத்தான், அவனுடைய நீதி என்றென்றைக்கும் நிற்கும் என்று எழுதியிருக்கிறபடியாகும்.

10. விதைக்கிறவனுக்கு விதையையும், புசிக்கிற தற்கு ஆகாரத்தையும் அளிக்கிறவர் உங்களுக்கு விதையை அளித்து, அதைப் பெருகப்பண்ணி, உங்கள் நீதியின் விளைச்சலை வர்த்திக்கச் செய்வார்.

பழைய ஏற்பாட்டுக்கால விசுவாசிகளைக் காட்டிலும் புதிய ஏற்பாட்டு நாட்களில் இன்னும் அதிக மாய் மக்கள் கொடுக்கும் திராணியைப் பெற்றி ருக்கிறார்கள். அவர்கள் தங்களுக்கு உண்டான வற்றிலிருந்து கொடுத்தார்கள், இவர்கள் தங்களுக்கு உண்டானவைகளை விற்றுக் கொடுத்தார்கள் என்று வேதம் கூறுகிறது.

மத்தேயு 2:11 அவர்கள் அந்த வீட்டுக்குள் பிரவேசித்து, பிள்ளையையும் அதின் தாயாகிய மரியாளையும் கண்டு, சாஷ்டாங்கமாய் விழுந்து அதைப் பணிந்துகொண்டு, தங்கள் பொக்கிஷங்களைத் திறந்து, பொன்னையும் தூபவர்க்கத்தையும் வெள்ளைப்போளத்தையும் அதற்குக் காணிக்கையாக வைத்தார்கள்.

லூக்கா 8:3 ஏரோதின் காரியக்காரனான கூசாவின் மனைவியாகிய யோவன்னாளும், சூசன்னாளும், தங்கள் ஆஸ்திகளால் அவருக்கு

ஊழியஞ்செய்துகொண்டு வந்த மற்ற அநேகம் ஸ்திரிகளும் அவருடனே இருந்தார்கள்.

சாஸ்திரிகள் தங்கள் பொக்கிஷங்களைத் திறந்து, பொன்னையும் தூபவர்க்கத்தையும் வெள்ளைப் போளத்தையும் இயேசுவுக்கு காணிக்கையாக வைத்தார் கள். தங்கள் ஆஸ்திகளால் அவருக்கு ஊழியஞ் செய்துகொண்டு வந்த மற்ற அநேகம் ஸ்திரிகளும் அவருடனே இருந்தார்கள் என்று வேதம் கூறுகிறது. தங்களுடைய ஆஸ்திகளைத் தேவனுடைய ஊழியத்தில் பயன்படுத்தி இருக்கிறதைப் பார்க்கிறோம். நமக்கென் றுள்ள பொக்கிஷங்களைத் திறந்து, நாம் தேவனுக் கென்று கொடுக்க கற்றுக்கொள்ள வேண்டும்.

லூக்கா 6:38 கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்; அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள்; நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர் களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும் என்றார்.

கொடுப்பதென்று வரும்போது அநேகர் இருப்பதிலேயே சிறிய அளவுகோலைப் பயன் படுத்தலாமா என்று எண்ணுகிறதைப் பார்க்கிறோம். சிறிய அளவுகோலை வைத்துக்கொண்டு நான் அளக்கும்போது, தேவனும் அப்படி அளந்தால் நான் எப்படி ஆசீர்வதிக்கப்பட முடியும்? விதைப்பதற்கு பெரிய அளவுகோலைப் பயன்படுத்தினால்தான் பெருக்கமாக நாம் ஆசீர்வதிக்கப்பட முடியும். நம்முடைய ஆசீர் வாதத்தின் அளவுகோல் நம் கையில்தான் இருக்கிறது. பழைய ஏற்பாட்டின் விசுவாசிகளை நாம் மிஞ்ச வேண்டும்.

நம்முடைய தேவனுடைய ஆலயத்திலிருந்து நன்மை தேசத்திற்கு உண்டென்பதை இராஜாக்களுக்கு தேவன் உணர்த்தும் பொழுது, அரசாங்கத்தின் பணம் ஆலயத்தின் வேலைக்காய் வரும்.

எஸ்றா 7:6 இந்த எஸ்றா இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் அருளிய மோசேயின் நியாயப் பிரமாணத்திலே தேறின வேதபாரகனாயிருந்தான்; அவனுடைய தேவனாகிய கர்த்தருடைய கரம் அவன் மேல் இருந்ததினால், அவன் கேட்டவைகளை யெல்லாம் ராஜா அவனுக்குக் கொடுத்தான்.

எஸ்றா 7:20-23,27 பின்னும் உன் தேவனுடைய ஆலயத்துக்கு அவசியமாய்க் கொடுக்க வேண்டியிருப்பதை, நீ ராஜாவின் கஜானாவிலிருந்து வாங்கிக் கொடுப்பாயாக.

21. நதிக்கு அப்புறத்திலிருக்கிற எல்லா கஜான்சிகளுக்கும் அர்தசஷ்டா என்னும் ராஜாவாகிய நாம் இடுகிற கட்டளை என்னவென்றால், பரலோகத்தின் தேவனுடைய நியாயப்பிரமாணத்தைப் போதிக்கும் வேதபாரகனாகிய எஸ்றா என்னும் ஆசாரியன் நூறு தாலந்து வெள்ளி, நூற்றுக்கலக் கோதுமை, நூற்றுக் கலத் திராட்சரசம், நூற்றுக்கல எண்ணெய்மட்டும் உங்களைக் கேட்பவை எல்லாவற்றையும்,

22. வேண்டிய உப்பையும், தாமதமில்லாமல் கொடுக்கவும்...

எஸ்றா தேவனுடைய ஆசாரியன். தேவனாகிய கர்த்தருடைய கரம் அவன் மேல் இருந்ததினால், அவன் கேட்டவைகளையெல்லாம் ராஜா அவனுக்குக் கொடுத்தான் என்று பார்க்கிறோம். கர்த்தருடைய கரம் நம்மேல் இருக்கும் போது நாம் கேட்பவைகள் எல்லாம் நமக்கும் கிடைக்கும். ஒரு ஆசாரியன் கேட்டதெல்லாம் கிடைத்தது. நம் தேசத்திலும் இந்த நிலை உண்டாகும்.

23. பரலோகத்தின் தேவனுடைய கற்பனை யின்படியே, எது தேவையாயிருக்குமோ அதுவெல்லாம் பரலோகத்தின் தேவனுடைய ஆலயத்திற்கு ஜாக்கிரதையாய்ச் செலுத்தப்படவும் வேண்டும்; ராஜாவும் அவர் குமாரரும் ஆளும் ராஜ்யத்தின்மேல் கடுங்கோபம் வருவானேன்.

27. எருசலேமிலுள்ள கர்த்தருடைய ஆலயத்தை அலங்கரிக்க, இப்படிப்பட்ட யோசனையை ராஜாவின் இருதயத்தில் அருளி, ராஜாவுக்கும் அவருடைய மந்திரிமார்களுக்கும் ராஜாவின் கைக் குள்ளான பலத்த எல்லா மகாப்பிரபுக்களுக்கும் முன்பாக எனக்குத் தயவு கிடைக்கப்பண்ணின எங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

எஸ்றா 8:36 பின்பு ராஜாவின் சன்னதுகளை நதிக்கு இப்புறத்திலிருக்கிற ராஜாவின் தேசாதிபதி களுக்கும் அதிகாரிகளுக்கும் ஒப்புவித்தார்கள்; அப்பொழுது அவர்கள் ஜனங்களுக்கும் தேவனுடைய ஆலயத்துக்கும் உதவியாயிருந்தார்கள்.

இப்பொழுதும் கிறிஸ்துவின் அதிகாரம் உண்டா யிருக்கிறது. தேசத்தில் ஆளுகிறவர்கள் மேல் கடுங் கோபம் வராதபடிக்கு, பரலோக தேவனுடைய ஆலயத்திற்குத் தேவையாய் இருக்கிறதையெல்லாம்; ஜாக்கிரதையாய் செலுத்தப்பட வேண்டும். அது மட்டுமல்ல கர்த்தருடைய ஆலயத்தை அலங்கரிக்க வேண்டும் என்ற எண்ணத்தை ராஜாவின் இருதயத்தில் தேவனே ஏற்படுத்துகிறார். ராஜாக்கள் தேவனுடைய ஆலயத்தைக் கட்ட உதவியாக இருந்தார்கள். ஒரு அரசாங்கம் நன்றாக இருக்க வேண்டுமானால், அது திருச்சபைக்கு உதவியாக இருக்க வேண்டும்.

தேவாலயத்தினை கட்டுகிறதில் தேவனுடைய கரம்

தேவனுடைய வார்த்தையை பேசுவதின் மூலம் ஆலயம் கட்டப்படும்

6

ஏசாயா 45 : 11 இஸ்ரவேலின் பரிசுத்தரும் அவனை உருவாக்கினவருமாகிய கர்த்தர் சொல்லுகிறதாவது: வருங்காரியங்களை என்னிடத்தில் கேளுங்கள்; என் பிள்ளைகளைக் குறித்தும், என் கரங்களின் கிரியைகளைக் குறித்தும் எனக்குக் கட்டளையிடுங்கள்.

எஸ்றா 7 : 28 அப்படியே என் தேவனாகிய கர்த்தருடைய கரம் என் மேல் இருந்ததினால் நான் திடன் கொண்டு, இஸ்ரவேலின் சில தலைவரை என்னோடேகூட வரும்படி சேர்த்துக் கொண்டேன்.

ஏசாயா 44 : 28 கோரேசைக் குறித்து: அவன் என் மேய்ப்பன் அவன் எருசலேமை நோக்கி: நீ கட்டப்படு என்றும்; தேவாலயத்தை நோக்கி: நீ அஸ்தி பாரப்படு என்றும் சொல்லி, எனக்குப் பிரியமானதை யெல்லாம் நிறைவேற்றுவான் என்று சொல்லுகிறவர் நான்.

கர்த்தரின் ஆலயத்தைக் கட்டும்படியாக நாம் தேவனுடைய வார்த்தைகளை நம் வாயில் வைத்துப் பேசவேண்டும். கோரேஸ், எருசலேமை நோக்கி கட்டப் படு என்றும் தேவாலயத்தை நோக்கி அஸ்திபாரப்படு என்றும் சொல்லுவான் என்று கர்த்தர் சொல்லுகிறார். தேவன் வார்த்தையினால் சொல்லி கரத்தினால் நிறை வேற்றுகிறவர், எனவே நாம் இயேசுவின் நாமத்தினால் பேசப் பேச தேவன் கிரியை செய்வார்.

தேவனுடைய ஆலயத்தைக் கட்டத் தொடங்கினார்கள், ஆரம்பம் அற்பமாகத் தோன்றினாலும், தேவன் வெற்றியாய் முடிக்க வல்லவராயிருக்கிறார்.

2 நாளாகமம் 3 : 1 பின்பு சாலொமோன் எருசலேமிலே தன் தகப்பனாகிய தாவீதுக்குக் காண்பிக்கப்பட்ட மோரியா என்னும் மலையில் எபூசியனாகிய ஒர்னானின் களம் என்னும் தாவீது குறித்துவைத்த ஸ்தலத்திலே கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டத்தொடங்கினான்.

எஸ்றா 5 : 2 அப்பொழுது செயல்தியேலின் குமாரனாகிய செருபாபேலும் யோசதாக்கின் குமாரனாகிய யெசுவாவும் எழும்பி, எருசலேமிலுள்ள தேவனுடைய ஆலயத்தைக் கட்டத் தொடங்கினார்கள்; அவர்களுக்குத் திடன் சொல்ல தேவனுடைய தீர்க்க தரிசிகளும் இருந்தார்கள்.

தேவனுடைய ஆலயத்தையும் எருசலேமின் அலங்கத்தையும் கட்டுகிறபொழுது, அநேகர் கட்டுகிறவர் களின் கைகள் தளர்ந்து போகக்கூடிய அளவில் பேசினார்கள். இந்த அவிசுவாசம் நிறைந்த ஜனங்களின் நடுவில் திடன் சொல்லுகிற தீர்க்க தரிசிகளாய் எழும்புவோம்.

சகரியா 4 : 6,7,9,10 அப்பொழுது அவர்: செருபாபேலுக்குச் சொல்லப்படுகிற கர்த்தருடைய வார்த்தை என்னவென்றால், பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவி யினாலேயே ஆகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

7. பெரிய பர்வதமே, நீ எம்மாத்திரம்? செருபாபேலுக்கு முன்பாக நீ சமபூமியாவாய்; தலைக் கல்லை அவன் கொண்டுவருவான்; அதற்குக் கிருபை

யுண்டாவதாக கிருபையுண்டாவதாக என்று ஆர்ப்பரிப் பார்கள் என்றார்.

எவ்வளவு தடைகள் உள்ளது என்று யோசிப் பதைக்காட்டிலும், பரிசுத்த ஆவியானவரால் எல்லாம் ஆகும் என்று விசுவாசிக்க வேண்டும். அப்படி நாம் விசுவாசிக்கும்போது தடைகளை தகர்த்துப்போடுகிற பெலனைத் தேவன் நமக்குத் கிருபையாக தருவார்.

9. செருபாபேலின் கைகளால் இந்த ஆலயத்துக்கு அஸ்திபாரம் போடப்பட்டது; அவன் கைகளே இதை முடித்துத்தீர்க்கும்; அதினால் சேனைகளின் கர்த்தர் என்னை உங்களிடத்திற்கு அனுப்பினாரென்று அறிவாய்.

10. அற்பமான ஆரம்பத்தின் நாளை யார் அசட்டை பண்ணலாம்? பூமியெங்கும் சுற்றிப் பார்க்கிற வைகளாகிய கர்த்தருடைய ஏழு கண்களும் செருபா பேலின் கையில் இருக்கிற தூக்குநூலைச் சந்தோஷ மாய்ப் பார்க்கிறது என்றார்.

செருபாபேலின் கைகளால் இந்த ஆலயத்துக்கு அஸ்திபாரம் போடப்பட்டது; அவன் கை களே இதை முடித்துத்தீர்க்கும். என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். தலைக்கல்லை அவன் கொண்டு வருவான். ஆம் நாம் துவக்குகிறவர்கள் மட்டுமல்ல முடிக்கிறவர்கள். அஸ்திபாரக்கல்லை வைப்பது போல் தலைக்கல்லையும் வைத்து ஆலய வேலையை நேர்த்தியாய் முடிக்கிறவர்கள். ஆரம்பம் அற்பமானதாய் தோன்றலாம் முடிவு சம்பூரணமாய் இருக்கும்.

எதிர்ப்புகள் வரும்போது ஜெபம் பண்ணிக்கொண்டே கட்டினார்கள்

நெகேமியா 4 : 9,14,17,18 ஆனாலும் நாங்கள் எங்கள் தேவனை நோக்கி ஜெபம்பண்ணி, அவர்கள் நிமித்தம் இரவும்பகலும் ஜாமங்காக்கிறவர்களை வைத்தோம்.

14.அதை நான் பார்த்து எழும்பி, பிரபுக் களையும் அதிகாரிகளையும் மற்ற ஜனங்களையும் நோக்கி: அவர்களுக்கு பயப்படாதிருங்கள்; நீங்கள் மகத்துவமும் பயங்கரமுமான ஆண்டவரை நினைத்து, உங்கள் சகோதரருக்காகவும், உங்கள் குமாரருக் காகவும், உங்கள் குமாரத்திகளுக்காகவும், உங்கள் மனைவிகளுக்காகவும், உங்கள் வீடுகளுக்காகவும் யுத்தம்பண்ணுங்கள் என்றேன்.

17. அலங்கத்தைக்கட்டுகிறவர்களும், சுமை சுமக்கிறவர்களும், சுமையேற்றுகிறவர்களும், அவரவர் ஒரு கையிலே வேலை செய்து, மறுகைனாலே ஆயுதம் பிடித்திருந்தார்கள்.

18. கட்டுகிறவர்கள் அவரவர் தங்கள் பட்டயத் தை தங்கள் இடுப்பிலே கட்டிக்கொண்டவர்களாய் வேலை செய்தார்கள்;...

நெகேமியாவின் நாட்களில் எருசலேமின் அலங்கத்தை எடுப்பித்துக் கட்டவிடாதபடிக்கு, யுத்தம் பண்ணவந்தார்கள். அந்த வேலையிலே ஜனங்கள் மகத்துவமும் பயங்கரமுமான ஆண்டவரை நினைத்து, ஜெபம்பண்ணி எதிரிகள் நிமித்தம் இரவும் பகலும் ஜாமங்காக்கிறவர்களை வைத்தார்கள் என்று வேதம் கூறுகிறது. நாமும் எதிர்ப்பான சூழ்நிலைகளில் திறப்பிலே நிற்கிற ஜனங்களாக இருக்க வேண்டும். நாமும் நம்முடைய குடும்பங்களும் நன்றாயிருக்கும் படிக்கு முனைப்பாய் செயல்படவேண்டும். அவரவர் ஒரு கையிலே வேலை செய்து, மறுகையிலே ஆயுதம் பிடித்திருந்தார்கள் என்று பார்க்கிறோம். நாமும் ஒருபக்கம் வேலை செய்தாலும் இன்னொரு பக்கம் ஜெபிக்க வேண்டும்.

புதிய ஏற்பாட்டுக் காலத்தின் சபைகள்

ஜனங்கள் கர்த்தரைத் தேடும்படி ஆலயத்தை தேவன் கட்டுகிறார்

7 **ஆமோஸ் 9 : 12** அந்நாளிலே விழுந்து போன தாவீதின் கூடாரத்தை நான் திரும்ப எடுப்பித்து, அதின் திறப்புகளை அடைத்து, அதில் பழுதாய்ப் போனதைச் சீர்ப்படுத்தி, பூர்வ நாட்களில் இருந்ததுபோல அதை ஸ்தாபிப்பேன் என்று, இதைச் செய்கிற கர்த்தர் சொல்லுகிறார்.

அப்போஸ்தலர் 15 : 16,17 எப்படியெனில், மற்ற மனுஷரும், என்னுடைய நாமந்தரிக்கப்படும் சகல ஜாதிகளும், கர்த்தரைத் தேடும்படிக்கு,

17.நான் இதற்குப்பின்பு திரும்பிவந்து, விழுந்து போன தாவீதின் கூடாரத்தை மறுபடியும் எடுப்பித்து, அதிலே பழுதாய்ப்போனவைகளை மறுபடியும் சீர்ப்படுத்தி, அதைச் செவ்வையாக நிறுத்துவேன் என்று இவைகளையெல்லாஞ் செய்கிற கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறது.

நான் இதற்குப் பின்பு திரும்பிவந்து, விழுந்து போன தாவீதின் கூடாரத்தை மறுபடியும் எடுப்பித்து, அதிலே பழுதாய்ப் போனவைகளை மறுபடியும் சீர் படுத்தி, அதைச் செவ்வையாக நிறுத்துவேன், பூர்வ நாட்களில் இருந்தது போல அதை ஸ்தாபிப்பேன் என்கிறார். எதற்காகவென்றால் மற்ற மனுஷரும், என்னுடைய நாமந்தரிக்கப்படும் சகல ஜாதிகளும், கர்த்தரைத் தேடும்படிக்கு என்று எழுதப்பட்டுள்ளது. இவைகளையெல்லாம் செய்கிற கர்த்தர் என்று கூறுகிறார். கர்த்தர் செய்யும்போது ஒரு மனிதனும் அதைத் தடை செய்யமுடியாது.

ஏசாயா 2 : 2,3 கடைசிநாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்பட்டு, மலைகளுக்கு மேலாய் உயர்த்தப் படும்; எல்லா ஜாதிகளும் அதற்கு ஓடிவருவார்கள்.

3. திரளான ஜனங்கள் புறப்பட்டு வந்து நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதை களில் நடப்போம் என்பார்கள்; ஏனெனில் சீயோனி லிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும்.

ஏசாயா 54 : 2,3 உன் கூடாரத்தின் இடத்தை விசாலமாக்கு; உன் வாசஸ்தலங்களின் திரைகள் விரிவாகட்டும்; தடை செய்யாதே; உன் கயிறுகளை நீளமாக்கி, உன் முளைகளை உறுதிப்படுத்து.

3. நீ வலதுபுறத்திலும் இடதுபுறத்திலும் இடங் கொண்டு பெருகுவாய்; உன்சந்ததியார் ஜாதிகளைச் சுதந்தரித்துக்கொண்டு, பாழாய்க்கிடந்த பட்டணங் களைக் குடியேற்றுவிப்பார்கள்

எல்லா ஜாதிகளும் கடைசி நாட்களில் கர்த்தருடைய ஆலயத்திற்கு ஓடி வருவார்கள் என்று வேதம் கூறுகிறது. எல்லா ஜாதிகளுக்கும் அடைக்கலம் கிடைக்க வேண்டுமானால், இன்னும் அநேக திருச் சபைகள் உண்டாக வேண்டும், பெரிது பெரிதாய் தேவாலயங்கள் கட்டப்பட வேண்டும். உன் கூடாரத்தின் இடத்தை விசாலமாக்கு; உன் வாசஸ்தலங்களின் திரைகள் விரிவாகட்டும்; தடைசெய்யாதே; உன் கயிறு களை நீளமாக்கி, உன் முளைகளை உறுதிப்படுத்து என்று கர்த்தர் கூறுகிறார். பாழாய்க்கிடந்த பட்டணங் களைக் குடியேற்றுவிப்பார்கள், பாழாய்க்கிடக்கின்ற

பட்டணங்களுக்கு சபை வாழ்வளிக்கும், ஒவ்வொரு பட்டணமும்,கிராமங்களும் வாழ்வடைய வேண்டு மானால் அங்கே ஒரு திருச்சபை ஸ்தாபிக்கப்பட வேண்டும்.

ஆகாய் 2 : 7,9 சகல ஜாதிகளையும் அசையப் பண்ணுவேன், சகல ஜாதிகளாலும் விரும்பப்பட்டவர் வருவார்; இந்த ஆலயத்தை மகிமையினால் நிறையப்பண்ணுவேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

9. முந்தின ஆலயத்தின் மகிமையைப் பார்க்கிலும், இந்தப் பிந்தின ஆலயத்தின் மகிமை பெரியதாயிருக்கும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்; இவ்விடத்திலே சமாதானத்தைக் கட்டளையிடுவேன் என்று சேனைகளின் கர்த்தர் உரைக்கிறார் என்று சொல் என்றார்.

யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்று சகல ஜாதிகளும் பேசிக்கொள்வார்கள் என்று வேதம் கூறுகிறது. சகல ஜாதிகளையும் கர்த்தர் அசையப் பண்ணும்போது, எல்லா ஜாதிகளும் தேவனுடைய வழிகளைக்கற்றுக்கொள்ள விரும்புவார்கள். அவர் பாதையில் நடக்கத் திட்டமிடுவார்கள். சகல ஜனங் களாலும் விரும்பப்படுகிறவர் இயேசு. பழைய ஏற்பாட்டுக் கால சபைகளைக் காட்டிலும் புதிய ஏற்பாட்டுக் கால சபைகளின் மகிமை பெரிதாயிருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்.

தேவனுடைய ஆலயம் மகா அலங்காரமாயிருக்கிறது

அவருடைய தாபரஸ்தலம் மகிமையாயிருக்கும்

8 **சங்கீதம் 93:5** உமது சாட்சிகள் மிகவும் உண்மையுள்ளவைகள்; கர்த்தாவே, பரிசுத்த மானது நித்தியநாளாக உமது ஆலயத்தின் அலங்காரமாயிருக்கிறது.

ஏசாயா 11:10 அக்காலத்திலே, ஜனங்களுக்குக் கொடியாக நிற்கும் ஈசாயின் வேருக்காக ஜாதிகள் விசாரித்துக்கேட்பார்கள்; அவருடைய தாபரஸ்தலம் மகிமையாயிருக்கும்.

ஏசாயா 60 : 13 என் பரிசுத்த ஸ்தானத்தைச் சிங்காரிக்கும்படிக்கு, லீபனோனின் மகிமையும், தேவதாருவிருட்சங்களும், பாய்மரவிருட்சங்களும், புன்னைமரங்களுங்கூட உன்னிடத்திற்குக் கொண்டு வரப்படும்; என் பாதஸ்தானத்தை மகிமைப்படுத்துவேன்.

எஸ்றா 7 : 27 எருசலேமிலுள்ள கர்த்தருடைய ஆலயத்தை அலங்கரிக்க, இப்படிப்பட்ட யோசனையை ராஜாவின் இருதயத்தில் அருளி, ராஜாவுக்கும் அவருடைய மந்திரிமார்களுக்கும் ராஜாவின் கைக் குள்ளான பலத்த எல்லா மகாப்பிரபுக்களுக்கும் முன்பாக எனக்குத் தயவு கிடைக்கப்பண்ணின எங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

தேவனுடைய ஆலயம் எப்படியிருந்தாலும் பரவாயில்லை என்று நாம் நினைக்கக் கூடாது. தேவன் தம்முடைய பாதஸ்தானம் மிகவும் அலங்காரமாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறார். ஆகவே அலங்கரிக்க வேண்டும் என்ற எண்ணத்தை ராஜாவின்

இருதயத்தில் ஏற்படுத்துகிறார். அலங்கரிக்க தேவை யான அனைத்தையும் தேவனே கொண்டுவரும்படி மக்களிடம் கூறுகிறார். என் பரிசுத்த ஸ்தானத்தைச் சிங்காரிக்கும்படிக்கு, அலங்கரிக்கும்படிக்கு, லீபனோனின் மகிமையும், தேவதாருவிருட்சங்களும், பாய்மர விருட்சங்களும், புன்னை மரங்களுங்கூட உன்னிடத் திற்குக் கொண்டுவரப்படும்; என் பாதஸ்தானத்தை மகிமைப்படுத்துவேன் என்று கூறுகிறார்.

தேவனுடைய வீட்டைக் குறித்து தாவீதுக்கு உண்டாயிருந்த வைராக்கியம்

தேவரகமான வைராக்கியம்

9 ***சங்கீதம் 132 : 2–8,13,14*** அவன்: நான் கர்த்தருக்கு ஒரு இடத்தையும், யாக்கோபின் வல்லவருக்கு ஒரு வாசஸ்தலத்தையும் காணுமட்டும்,

3. என் வீடாகிய கூடாரத்தில் பிரவேசிப்பது மில்லை, என் படுக்கையாகிய கட்டிலின்மேல் ஏறுவது மில்லை ;

4. என் கண்களுக்கு நித்திரையையும், என் இமைகளுக்கு உறக்கத்தையும் வரவிடுவதுமில்லை என்று,

5. கர்த்தருக்கு ஆணையிட்டு, யாக்கோபின் வல்லவருக்குப் பொருத்தனை பண்ணினான்.

6. இதோ, நாம் எப்பிராத்தாவிலே அதின் செய்தியைக் கேட்டு, வனத்தின் வெளிகளில் அதைக் கண்டோம்.

7. அவருடைய வாசஸ்தலங்களுக்குள் பிரவேசித்து, அவர் பாதபடியில் பணிவோம்.

தேவனுடைய வீட்டைக்குறித்து தாவீதுக்கு உண்டாயிருந்த வைராக்கியத்தை இங்கு பார்க்கிறோம். அவன் ஆலயத்தைக் கட்டுகிற காரியத்தில் தேவனுடன் ஒரு பொருத்தனை பண்ணிக்கொண்டான். கர்த்தருடைய ஆலயத்தைக் காணுமட்டும் என்று கூறகிறதைப் பார்க்கிறோம். சாலொமோனுடைய நாட்களில் பரலோகத்திலிருந்து தாவீது ஆலயத்தைக் கண்டு களிகூர்திருப்பார். நம்முடைய வைராக்கியமே இன்றைக்கும் ஆலயத்தைக் காணும்படி செய்யும்.

8. கர்த்தாவே, உமது வல்லமை விளங்கும் பெட்டியுடன் நீர் உமது தாபர ஸ்தலத்திற்குள் எழுந்தருளும்.

13. கர்த்தர் சீயோனைத் தெரிந்துகொண்டு, அது தமக்கு வாசஸ்தலமாகும்படி விரும்பினார்.

14. இது என்றென்றைக்கும் நான் தங்கும் இடம்; இதை நான் விரும்பினபடியால், இங்கே வாசம் பண்ணுவேன்.

கர்த்தர் தமக்கென்று கட்டப்படும் ஸ்தாபரஸ் தலத்தை விரும்புகிறார். இது என்றென்றைக்கும் நான் நிற்கும் இடம், இதை நான் விரும்பினபடியால், இங்கே வாசம் பண்ணுவேன் என்று கூறுகிறார். கர்த்தாவே, உமது வல்லமை விளங்கும் பெட்டியுடன் நீர் உமது தாபரஸ்தலத்திற்குள் எழுந்தருளும் என்று தாவீது கூறுகிறதைப் பார்க்கிறோம். திருச்சபை என்பது தேவனுடைய வல்லமை விளங்கும், அதிகாரம் விளங்கும் இடம். தேவனுடைய வார்த்தையில் இருக்கிற வல்லமை வெளிப்படும்படி புதிய ஏற்பாட்டு சபைகளை தேவன் ஏற்படுத்தியிருக்கிறார்.

சாலொமோன் தேவனுடைய ஆலயத்தைக் கட்டி முடித்தது போல நாமும் கட்டி முடிப்போம்.

1 இராஜாக்கள் 8:20 இப்போதும் கர்த்தர் சொல்லிய தம்முடைய வார்த்தையை நிறைவேற்றினார்; கர்த்தர் சொன்னபடியே, நான் என் தகப்பனாகிய தாவீதின் ஸ்தானத்தில் எழும்பி, இஸ்ரவேலின் சிங்காசனத்தின்மேல் உட்கார்ந்து, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரின் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்டினேன்.

2 நாளாகமம் 6:2 தேவரீர் வாசம்பண்ணத்தக்க வீடும், நீர் என்றைக்கும் தங்கத்தக்க நிலையான ஸ்தானமுமாகிய ஆலயத்தை உமக்குக்கட்டினேன்

என்றும் சொல்லி,

2 நாளாகமம் 7:11 இவ்விதமாய் சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்தையும் ராஜ அரமனையையும் கட்டித்தீர்த்தான்; கர்த்தருடைய ஆலயத்திலும் தன் அரமனையிலும் சாலொமோன் செய்ய மனதாயிருந்த தெல்லாம் அநுகூலமாயிற்று.

சங்கீதம் 27 : 4 கர்த்தரிடத்தில் ஒன்றை நான் கேட்டேன், அதையே நாடுவேன், நான் கர்த்தருடைய மகிமையைப் பார்க்கும்படியாகவும், அவருடைய ஆலயத்தில் ஆராய்ச்சி செய்யும்படியாகவும், நான் என் ஜீவனுள்ள நாளெல்லாம் கர்த்தருடைய ஆலயத்தில் தங்கியிருப்பதையே நாடுவேன்.

இங்கு சாலொமோன் கர்த்தர் சொல்லிய தம்முடைய வார்த்தையை நிறைவேற்றினார்; கர்த்தர் சொன்னபடியே, நான் என் தகப்பனாகிய தாவீதின் ஸ்தானத்தில் எழும்பி, இஸ்ரவேலின் சிங்காசனத்தின் மேல் உட்கார்ந்து, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரின் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்டினேன் என்று கூறுகிறான். கர்த்தருடைய ஆலயத்தில் சாலொமோன் செய்ய மனதாயிருந்ததெல்லாம் அநுகூலமாயிற்று என்று பார்க்கிறோம். கர்த்தருடைய ஆலயத்தை சாலொமோன் கட்டித்தீர்த்தது போல நாமும் தேவனுடைய ஆலயத்தைக் கட்டித்தீர்ப்போம்.

சாலொமோனின் ஜெபம்

1 இராஜாக்கள் 8:29 உமது அடியேன் இவ்விடத்திலே செய்யும் விண்ணப்பத்தைக் கேட்கும்படி என்னுடைய நாமம் விளங்குமென்று நீர் சொன்ன ஸ்தலமாகிய இந்த ஆலயத்தின் மேல் உம்முடைய கண்கள் இரவும் பகலும் திறந்திருப்பதாக.

30. உமது அடியானும், இந்த ஸ்தலத்திலே விண்ணப்பம் செய்யப்போகிற உமது ஜனமாகிய இஸ்ரவேலும் பண்ணும் ஜெபத்தைக் கேட்டருளும்: பரலோகமாகிய உம்முடைய வாசஸ்தலத்திலே அதை நீர் கேட்பீராக, கேட்டு மன்னிப்பீராக.

1 இராஜாக்கள் 9 : 3 கர்த்தர் அவனை நோக்கி; நீ என் சமுகத்தில் செய்த உன் விண்ணப்பத்தையும் உன் வேண்டுதலையும் கேட்டேன்; நீ கட்டின இந்த ஆலயத்தில் என் நாமம் என்றைக்கும் விளங்கத்தக்கதாக, அதைப் பரிசுத்தமாக்கினேன்; என் கண்களும் என் இருதயமும் எந்நாளும் அங்கேயிருக்கும்.

உம்முடைய நாமம் விளங்குமென்று நீர் சொன்ன ஸ்தலமாகிய இந்த ஆலயத்தின்மேல் உம்முடைய கண்கள் இரவும் பகலும் திறந்திருப்பதாக என்று சாலொமோன் ஜெபம் பண்ணினான். கர்த்தரும் மறுபடியும் சாலொமோனுக்கு தரிசனமாகி, என் கண்கள் மட்டுமல்ல என் இருதயமும் அதன் மேல் இருக்கும் என்கிறார். கர்த்தருடைய ஆலயத்தினைக் கட்டி முடித்து தேவனை நோக்கி சாலொமோன் ஜெபம் பண்ணி, ஜனங்கள் பக்கமாய்த் திரும்பி ஆசீர்வாதங்களை கர்த்தரின் நாமத்தினால் கூறினான்.

தேவாலயத்திலிருந்து வரும் ஆசீர்வாதங்கள்

ஆலயம் மனிதனுக்கு பரிபூரணத்தை தருமிடம்

10

சங்கீதம் 132:15–18 அதின் (சீயோனின்) ஆகாரத்தை நான் ஆசீர்வதித்து வருவேன்; அதின் ஏழைகளை நான் அப்பத்தினால் திருப்தியாக்குவேன்.

16. அதின் (சீயோனின்) ஆசாரியர்களுக்கு இரட்சிப்பை உடுத்துவேன்; அதிலுள்ள பரிசுத்தவான்கள் மிகவும் கெம்பீரிப்பார்கள்.

17. அங்கே தாவீதுக்காக ஒரு கொம்பை முளைக்கப்பண்ணுவேன்; நான் அபிஷேகம் பண்ணுவித்தவனுக்காக ஒரு விளக்கை ஆயத்தம் பண்ணினேன்.

18. அவன் சத்துருக்களுக்கு வெட்கத்தை உடுத்துவேன்; அவன் மீதிலோ அவன் கிரீடம் பூக்கும் என்றார்.

சங்கீதம் 36:8 உமது ஆலயத்திலுள்ள சம்பூரணத்தினால் திருப்தியடைவார்கள்; உமது பேரின்ப நதியினால் அவர்கள் தாகத்தைத் தீர்க்கிறீர்.

சங்கீதம் 65:4 உம்முடைய பிரகாரங்களில் வாசமாயிருக்கும்படி நீர் தெரிந்துகொண்டு சேர்த்துக் கொள்ளுகிறவன் பாக்கியவான்; உம்முடைய பரிசுத்த ஆலயமாகிய உமது வீட்டின் நன்மையால் திருப்தியாவோம்.

சங்கீதம் 92:13 கர்த்தருடைய ஆலயத்திலே நாட்டப்பட்டவர்கள் எங்கள் தேவனுடைய பிரகாரங்களில் செழித்திருப் பார்கள்.

யோவேல் 3:18 அக்காலத்தில் பர்வதங்கள் திராட்சரசத்தைப் பொழியும், மலைகள் பாலாய் ஓடும், யூதாவின் ஆறுகள் எல்லாம் பிரவாகித்து ஓடும்; ஒரு ஊற்று கர்த்தருடைய ஆலயத்திலிருந்து புறப்பட்டுச் சித்தீம் என்னும் பள்ளத்தாக்கை நீர்ப்பாய்ச்சலாக்கும்.

மேற்கூறிய தேவனுடைய வார்த்தைகளைப் பார்க்கும் போது சபை என்பது மனுவர்க்கத்தின் ஆசீர்வாதத்திற்கென்றே தேவன் கொடுத்தது என்பது தெளிவாய் விளங்குகிறது. தேவன் வாசம் பண்ண இடமில்லாதவராய் நம்மிடம் பூமியில் இடம் கேட்கவில்லை. அவர் பரலோகத்திலே தங்கப்பட்டணத்திலே வாசமாயிருக்கிறவர். அவர் அதைத் துறந்து நம் மத்தியில் வாசம் பண்ணுவது நம்முடைய ஆசீர்வாதத்திற்காகவே தவிர வேறொன்றும் இல்லை. ஒரு ஊற்று கர்த்தருடைய ஆலயத்திலிருந்து புறப்பட்டுச் சித்தீம் என்னும் பள்ளத்தாக்கை நீர்ப்பாய்ச்சலாக்கும் என்று பார்க்கிறோம். நம்முடைய வாழ்வை தேவனுடைய ஆலயத்திலிருந்து புறப்படுகிற ஆசீர்வாதம் என்னும் நதி செழிப்புள்ளதாய் மாற்றும்.

தேவனுடைய ஆலயம் மனிதர்களுக்கு வாழ்வளிக்குமிடம்

சங்கீதம் 27 : 5 தீங்குநாளில் அவர் என்னைத் தம்முடைய கூடாரத்தில் மறைத்து, என்னைத் தமது கூடார மறைவிலே ஒளித்துவைத்து, என்னைக் கன்மலையின்மேல் உயர்த்துவார்.

சங்கீதம் 31:20 மனுஷருடைய அகங்காரத்துக்கு அவர்களை உமது சமுகத்தின் மறைவிலே மறைத்து, நாவுகளின் சண்டைக்கு அவர்களை விலக்கி, உமது கூடாரத்திலே ஒளித்துவைத்துக் காப்பாற்றுகிறீர்.

தீங்கு நாட்களில் தேவன் தம்முடைய கூடாரத்தின் மறைவிலே நம்மை ஒளித்துவைத்து காப்பாற்றுகிறவர். சத்துரு நம்மை கண்டுபிடித்து, எந்த தீமையும் நம் மேல் போடாதபடிக்கு அவன் கண்களுக்கு நம்மை மறைத்து வைக்கிறார். நாம் ஆலயத்தின் மூலமாக காப்பாற்றப் படுகிறோம்.

கர்த்தருடைய ஆலயத்திலிருந்து சொல்லப்பட்ட ஆசீர்வாதங்கள்

எண்ணாகமம் 6 : 24 கர்த்தர் உன்னை ஆசீர்வதித்து, உன்னைக்காக்கக்கடவர்,

25. கர்த்தர் தம்முடைய முகத்தை உன் மேல் பிரகாசிக்கப்பண்ணி, உன் மேல் கிருபையாயிருக்கக் கடவர்.

26. கர்த்தர் தம்முடைய முகத்தை உன்மேல் பிரசன்னமாக்கி, உனக்குச் சமாதானம் கட்டளையிடக் கடவர் என்பதே.

27. இவ்விதமாய் அவர்கள் என்நாமத்தை இஸ்ரவேல் புத்திரர் மேல் கூறக்கடவர்கள்: அப்பொழுது நான் அவர்களை ஆசீர்வதிப்பேன் என்று சொல் என்றார்.

சங்கீதம் 118 :26 கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்தரிக்கப்பட்டவர்; கர்த்தருடைய ஆலயத்திலிருந்து உங்களை ஆசீர்வதிக்கிறோம்.

கர்த்தருடைய ஆலயம் மனிதர்கள் மேல் தேவனுடைய ஆசீர்வாதங்களை கூறுகிற இடமாக இருக்கிறது. அங்கிருந்து சொல்லப்படும் ஆசீர்வாதங்கள் நிச்சயமாகவே நம்மேல் வந்து பலிக்கும்.

தேவாலயத்திற்குறிய இடம்

தாவீதை தேவன் தூதனைக்கொண்டு நடத்தினார்

11 தாவீதுராஜா தன் நாட்களில் தன்னுடைய தேசத்தில் வாதை உண்டானபோது பலி செலுத்தி, கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணும்படியாக தீர்க்கதரிசியின் மூலமாக, எபூசியனான ஓர்னானின் கலத்திற்குப் போக வேண்டும் என்ற கட்டளையைப் பெற்றுக் கொண்டதைப் பார்க்கிறோம். கர்த்தர் தமக்கு எங்கே பலிசெலுத்த வேண்டும் என்று குறிப்பான ஒரு இடத்தைக் கூருகிறார். பிற்காலத்தில் அந்த இடத்தில்தானே தாவீது கர்த்தருக்கு ஆலயத்தைக் கட்டவேண்டும் என்று திட்டம்பண்ணினான். நம்மிடத்திலும் தேவன் திட்டமாய்பேசி எங்கே இடத்தை வாங்கி ஆலயத்தைக் கட்டவேண்டும் என்று கூறுவார், நம்மை வழிநடத்துவார்.

தேவாலயத்திற்குரிய இடத்தினை தேவனே தெரிந்துகொள்ளுகிறார்

2 நாளாகமம் 3:11 பின்பு சாலொமோன் எருசலேமிலே தன் தகப்பனாகிய தாவீதுக்குக் காண்பிக்கப்பட்ட மோரியா என்னும் மலையில் எபூசியனாகிய ஓர்னானின் களம் என்னும் தாவீது குறித்துவைத்த ஸ்தலத்திலே கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டத்தொடங்கினான்.

சாலொமோன் தன் தகப்பனாகிய தாவீதுக்கு காண்பிக்கப்பட்ட, தாவீது குறித்துவைத்த ஸ்தலத்திலே கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டத் தொடங்கினான். அந்த ஸ்தலம் தேவனால் தாவீதுக்கு காண்பிக்கப்பட்ட ஸ்தலம். தேவன் இடத்தைத் தெரிந்துகொள்ளுகிறார்.

தேவன் தெரிந்துகொண்ட இடத்தை ஜனங்கள் தாராளமாய் நமக்குக் கொடுப்பார்கள். ஓர்னான் தாராளமாய் அந்த இடத்தை இலவசமாய்த் தாவீதுக்குக் கொடுக்க முன்வந்ததைப்பார்க்கிறோம், தாவீதோ அதை விலைக்கிரயம் கொடுத்து வாங்கினான்.

சங்கீதம் 2:8 என்னைக்கேளும், அப்பொழுது ஜாதிகளை உமக்குச் சுதந்தரமாகவும், பூமியின் எல்லைகளை உமக்குச் சொந்தமாகவும் கொடுப்பேன்.

நாம் தேவனுக்கு ஆலயத்தைக் கட்டும்படி இடத்தினைக் கர்த்தரிடம்தான் கேட்கவேண்டும். என்னைக்கேளும் பூமியின் எல்லைகளை உமக்குச் சொந்தமாகவும் கொடுப்பேன் என்று கூறுகிறார். ஒரு இடத்தை மட்டுமல்ல இடங்களைத் தருவேன் என்று வாக்குப்பண்ணியிருக்கிறார். [And the uttermost parts of the earth for thy possession] பூமியின் எல்லைகள் பரியந்தம் என்றால், பூமியின் கடையாந்திரம்மட்டும் என்று பொருள். தேவன் அளவில்லாத பூமியின் இடங்களை சொந்தமாகத் தருகிறவர்.

இதை நாம் எப்படி சுதந்தரிப்போம்?

ரோமர் 4 : 16, 17 ஆதலால், சுதந்தரமானது கிருபையினால் உண்டாயிருக்கும்படிக்கு அது விசுவாசத்தினாலே வருகிறது. நியாயப்பிரமாணத்தைச் சார்ந்தவர்களாகிய சந்ததியாருக்கு மாத்திரமல்ல, நம்மெல்லாருக்கும் தகப்பனாகிய ஆபிரகாமுடைய விசுவாசத்தைச் சார்ந்தவர்களான எல்லாச் சந்ததியாருக்கும் அந்த வாக்குத்தத்தம் நிச்சயமாயிருக்கும்படிக்கு அப்படி வருகிறது.

17. அநேக ஜாதிகளுக்கு உன்னைத் தகப்பனாக ஏற்படுத்தினேன் என்று எழுதியிருக்கிறபடி, அவன் தான்

விசுவாசித்தவருமாய், மரித்தோரை உயிர்ப்பித்து, இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல் அழைக்கிறவருமாயிருக்கிற தேவனுக்கு முன்பாக நம்மெல்லாருக்கும் தகப்பனானான்.

சுதந்தரமானது கிருபையினால் உண்டாயிருக்கம்படி, அது விசுவசத்தினாலே வருகிறதா யிருக்கிறது. இடங்கள் நமக்குக் கிடைப்பது கிருபையினாலேயே. அதை விசுவாசத்தின் மூலமாக எடுத்துக்கொள்ளுகிறோம். விசுவாசம் இல்லையென்றால் நாம் இடங்களை சுதந்தரிக்க முடியாது. எந்த சுதந்தரமும் விசுவாசத்தினாலேயே வரும் தேவகிருபையே. கிருபை கொடுக்கிறது, கிருபை கொடுப்பதை விசுவாசம் எடுத்துக் கொள்ளுகிறது.

இல்லாததை இருக்கிறதைப்போல் அழைக்கிற தேவனுக்கு முன்பாக என்ற வார்த்தையைப் பார்க்கிறோம். நாமும் விசுவாசத்தில் இல்லாத இடத்தினை இருக்கிறதுபோல அழைக்கும்பொழுது அது நமக்கு உண்டாகும். நமக்கு இடம் வேண்டுமானால் இல்லாத இடத்தினை இருக்கிறதுபோல நாம் விசுவாசத்தில் அழைக்கவேண்டும். அழைத்தால் அது நமக்கு உண்டாகும்.

ஆதியாகமம் 13:14,15,17 லோத்து ஆபிராமைவிட்டுப் பிரிந்த பின்பு, கர்த்தர் ஆபிராமை நோக்கி: உன் கண்களை ஏறெடுத்து, நீ இருக்கிற இடத்திலிருந்து வடக்கேயும், தெற்கேயும், கிழக்கேயும், மேற்கேயும் நோக்கிப் பார்.

15. நீ பார்க்கிற இந்தப் பூமி முழுவதையும் நான் உனக்கும் உன் சந்ததிக்கும் என்றைக்கும் இருக்கும்படி கொடுத்து....

17. நீ எழுந்து தேசத்தின் நீளமும் அகலமும் எம்மட்டோ, அம்மட்டும் நடந்து திரி; உனக்கு அதைத் தருவேன் என்றார்.

நீ உன் கண்களை ஏறெடுத்துப்பார், நீ பார்க்கிற இந்த பூமி முழுவதையும் உனக்கும் உன் சந்ததிக்கும் என்றென்றைக்கும் இருக்கும்படிக்கு கொடுப்பேன் என்றார். விசுவாசத்துடன் நாம் பார்க்கும்போது, அது நமக்கு சொந்தமாக மாறும். நீ எழுந்து நடந்துதிரி, உனக்கு அதை தருவே என்று வாக்குப்பண்ணியிருக்கிறார். நாம் விசுவாசத்தில் கால்வைக்கும்போது அதை கர்த்தர் நமக்கு சுதந்தரமாகவே தருவார்.

ரோமர் 4:20–24 தேவனுடைய வாக்குத்தத்தத்தைக்குறித்து அவன் அவிசுவாச மாய்ச் சந்தேகப்படாமல்,

21. தேவன் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறாரென்று முழு நிச்சயமாய் நம்பி, தேவனை மகிமைப்படுத்தி, விசுவாசத்தில் வல்லவனானான்.

22. ஆகையால் அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது.

23. அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டதென்பது, அவனுக்காகமாத்திரமல்ல, நமக்காகவும் எழுதப்பட்டிருக்கிறது.

24. நம்முடைய கர்த்தராகிய இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவரை விசுவாசிக்கிற நமக்கும் அப்படியே எண்ணப்படும்.

தேவனுடைய வாக்குத்தத்தைக் குறித்து ஆபிரகாம் அவிசுவாசமாக சந்தேகப்படாமல், முழு நிச்சயமாக நம்பி விசுவாசத்தில் வல்லவனானான். அது அவனுக்கு

நீதியாக எண்ணப்பட்டது. நமக்கும் இதுதான் நீதியாக எண்ணப்படுகிறது. ஆபிரகாமுக்கு தேவன் இடத்தினைக் கொடுத்தார் என்றால் நமக்கும் கொடுப்பார்.

அப்போஸ்தலர் 7:5 இதிலே ஒரு அடி நிலத்தையாகிலும் அவனுடைய கையாட்சிக்குக் கொடாமலிருக்கையில், அவனுக்குப் பிள்ளை யில்லாதிருக்கும்போது: உனக்கும் உனக்குப்பின் வரும் உன் சந்ததிக்கும் இதைச்சுதந்தரமாகத் தருவேன் என்று அவனுக்கு வாக்குத்தத்தம் பண்ணினார்.

சுதந்தரத்தைக் குறித்து ஆபிரகாமுக்கு தேவன் வாக்குத்தத்தைக் கொடுத்தபோது ஒரு அடி நிலம் கூட அவனுக்குச் சொந்தமாக, அவனுடைய கையாட்சியின் கீழ் இல்லை. முதலாவதாக வாக்குத்தத்தத்தைதான் கொடுத்தார், அதன்பின்தான் சுதந்தரத்தைக் கொடுத்தார். நமக்கும் ஒரு அடி நிலம்கூட சொந்தமாக இல்லையென்றாலும் வாக்குத்தத்தத்தை நாம் பற்றிக்கொள்ளும்போது சுதந்தரத்தையும் பெற்றுக்கொள்ளுவோம்.

கலாத்தியர் 3:7,29 ஆகையால் விசுவாசமார்க்கத்தார்கள் எவர்களோ அவர்களே ஆபிரகாமின் பிள்ளைகளென்று அறிவீர்களாக.

29.நீங்கள் கிறிஸ்துவினுடைய வர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள்.

நாம் வாக்குத்தத்தத்தின்படி சுதந்தர ராயிருக்கிறோம். வாக்குத்தத்தத்தின் சுதந்தரர் என்றால் ஆபிரகாமின் காணியாட்சிக்கும் சுதந்தரராய் இருக்கிறீர்கள்.

எவ்வளவு பெரிய இடத்தினைத் தேவன் தருவார் என்றால், நாம் எவ்வளவு பெரிய இடத்தினை விசுவாசிக்க

முடிகிறதோ அவ்வளவு பெரியயிடத்தினைத் தருவார். ஆகவே தேசத்தின் நீளம் எம்மட்டோ அம்மட்டும் நடந்துதிரி என்றார். இடத்தின் விசாலத்தினை நாம்தான் நியமிக்கிறோம்.

சங்கீதம் 115:16 வானங்கள் கர்த்தருடையவைகள்; பூமியையோ மனுபுத்திரருக்குக் கொடுத்தார்.

பூமியை மனுபுத்திரருக்குக் கொடுத்தார் என்று பார்க்கிறோம். பூமி மனுபுத்திரருக்கு உரியதே, மனிதனுக்குறிய எதையும் நாம் உரிமையுடன் கேட்டுப் பெற்றுக்கொள்ளளாம்.

சங்கீதம் 132:2–5 அவன்: நான் கர்த்தருக்கு ஒரு இடத்தையும், யாக்கோபின் வல்லவருக்கு ஒரு வாசஸ்தலத்தையும் காணுமட்டும்,

3. என் வீடாகிய கூடாரத்திலே பிரவேசிப்பது மில்லை, என் படுக்கையாகிய கட்டிலின்மேல் ஏறுவதுமில்லை.

4. என் கண்களுக்கு நித்திரையையும், என் இமைகளுக்கு உறக்கத்தையும் வரவிடுவதுமில்லை என்று,

5.கர்த்தருக்கு ஆணையிட்டு, யாக்கோபின் வல்லவருக்குப் பொருத்தனைபண்ணினான்.

நான் கர்த்தருக்கு ஒரு இடத்தையும் யாக்கோபின் வல்லவருக்கு ஒரு வாசஸ்தலத்தையும் காணுமட்டும் ஓய்ந்திருக்கப்போவதில்லை என்று தாவீது கூறுகிறதைப் பார்க்கிறோம். என் கண்களுக்கு நித்திரை வரவிடப்போவதில்லை என்கிறார். நித்திரை வரவிடப் போவதில்லை என்றால் உறங்காமல் தேவனுடைய முகத்தை நோக்கிப் பார்க்கப் போகிறேன் என்று கூறுகிறார். இந்த வைராக்கியம் நம் ஒவ்வொருவருக்கும்

இருக்கவேண்டியது அவசியம். வைராக்கிய முள்ள வர்களே ஆலயத்தைக் கட்டி முடிப்பார்கள்.

விசுவாசிகளே இடத்தை வாங்கத்தக்க பணத்தினை கொடுப்பார்கள்.

நீதிமொழிகள் 27:23 உன் ஆடுகளின் நிலைமையை நன்றாய் அறிந்துகொள்; உன் மந்தைகளின்மேல் கவனமாயிரு.

26. ஆட்டுக்குட்டிகள் உனக்கு வஸ்திரத் தையும், கடாக்கள் வயல் வாங்கத்தக்க கிரயத்தையும் கொடுக்கும்.

சபைக்கு இடம் வாங்கவேண்டுமா, ஆடுகளின் நிலைமையை நன்றாய் அறிந்துகொள் என்று வேதம் கூறுகிறதைப் பார்க்கிறோம். ஏனெனில் இந்த ஆடுகள்தான் வஸ்திரத்தைக் கொடுக்கப்போகிறது. உங்கள் மந்தையின் ஆட்டுக்கடாக்கள் நன்றாய் இருந்தால் நல்லது. கடாக்கள்தான் இடத்தை வாங்கத்தக்க கிரயத்தைக் கொடுக்கப்போகிறது. காளைகளின் பெலத்தினாலே மிகுந்த வரத்துண்டு என்று வேதம் கூறுகிறது. ஒவ்வொரு ஊழியத்தின் பின்னனியிலும் தேவன் கொழுத்த கடாக்களை வைத்து அந்தந்த ஊழியங்களை ஆசீர்வதிக்க விரும்புகிறார். ஆடுகளைக் கொழுக்கப்பண்ணுவதே தேவனுக்கென்று இடங்களை வாங்கவும் ஆலயங்களைக்கட்டவுமே.

இப்படிப்பட்ட தேவாலயத்தைக் கட்டுகிற பணியில் உங்கள் பங்களிப்பு என்ன என்பதை உணர்ந்து விசுவாசத்துடன் செயல்படுங்கள். கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.

ஜெபக்குறிப்புகள்

1. தேவனுடைய சபையின் மேல் ஜனங்களுக்கு வாஞ்சையும் தாகமும் உண்டாகும்படியாக

***சங்கீதம்* 132:2–5** அவன்: நான் கர்த்தருக்கு ஒரு இடத்தையும், யாக்கோபின் வல்லவருக்கு ஒரு வாசஸ் தலத்தையும் காணுமட்டும்,

3. என் வீடாகிய கூடாரத்தில் பிரவேசிப்பது மில்லை, என் படுக்கையாகிய கட்டிலின்மேல் ஏறுவது மில்லை;

4. என் கண்களுக்கு நித்திரையையும், என் இமைகளுக்கு உறக்கத்தையும் வரவிடுவதுமில்லை என்று,

5. கர்த்தருக்கு ஆணையிட்டு, யாக்கோபின் வல்லவருக்குப் பொருத்தனை பண்ணினான்.

***சங்கீதம்* 26:8** கர்த்தாவே, உமது ஆலயமாகிய வாசஸ்தலத்தையும், மகிமை தங்கிய ஸ்தானத்தையும் வாஞ்சிக்கிறேன்.

யோவான் 2:17 அப்பொழுது: உம்முடைய வீட்டைக் குறித்து உண்டான பக்தி வைராக்கியம் என்னைப் பட்சித்தது என்று எழுதியிருக்கிறதை அவருடைய சீஷர்கள் நினைவு கூர்ந்தார்கள்.

***சங்கீதம்* 27:4** கர்த்தரிடத்தில் ஒன்றைக் கேட்டேன், அதையே நாடுவேன், நான் கர்த்தருடைய மகிமையைப் பார்க்கும்படியாகவும், அவருடைய ஆலயத்தில் ஆராய்ச்சி செய்யும்படியாகவும், நான் என் ஜீவனுள்ள நாளெல்லாம் கர்த்தருடைய ஆலயத்தில் தங்கியிருப்பதையே நாடுவேன்.

2. ஆலயத்தின் தேவைகளெல்லாம் தேவவல்லமையால் சந்திக்கப்படும்படியாக.

எபேசியர் 5:29 ...கர்த்தர் சபையை போஷித்துக் காப்பாற்றுகிறது போல...

ஏசாயா 43:6,7 நான் வடக்கை நோக்கி: கொடு என்றும் தெற்கை நோக்கி: வைத்திராதே என்றும் சொல்லி, தூரத்திலிருந்து என் குமாரரையும், பூமியின் கடையாந்தரத்திலிருந்து என் குமாரத்திகளையும்,

7. நான் என் மகிமைக்கென்று சிருஷ்டித்து உருவாக்கிப் படைத்து, என் நாமந்தரிக்கப்பட்ட யாவரையும் கொண்டுவா என்பேன்.

ஏசாயா 45:4 வெண்கலக் கதவுகளை உடைத்து, இருப்புத் தாழ்ப்பாள்களை முறித்து, அந்தகாரத்தில் இருக்கிற பொக்கிஷங்களையும், ஒளிப்பிடத்தில் இருக்கிற புதையல்களையும் உனக்குக் கொடுப்பேன்;...

ஆகாய் 2:5,6,8 நீங்கள் எகிப்திலிருந்து புறப்படுகிறபோது நான் உங்களோடே உடன்படிக்கை பண்ணின வார்த்தையின்படியே, என் ஆவியானவரும் உங்கள் நடுவில் நிலைகொண்டிருப்பார் பயப்படாதே யுங்கள்.

6.சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்; கொஞ்சக்காலத்துக்குள்ளே இன்னும் ஒருதரம் நான் வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் வெட்டாந் தரையையும் அசையப்பண்ணுவேன்.

7.சகல ஜாதிகளையும் அசையப்பண்ணு வேன், சகல ஜாதியாலும் விரும்பப்பட்டவர் வருவார்: இந்த ஆலயத்தை மகிமையினால் நிறையப் பண்ணுவேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

8.வெள்ளியும் என்னுடையது, பொன்னும் என்னுடையது என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

3. ஆலயத்திற்கென்று கொடுக்கும் ஜனங்கள் உருவாகும்படி

யாத்திராகமம் 36:3 அவர்கள், இஸ்ரவேல் புத்திரர் திருப்பணிக்கடுத்த சகல வேலைகளுக்காகவும் கொண்டுவந்த காணிக்கைப் பொருள்களை எல்லாம், மோசேயினிடத்தில் வாங்கிக்கொண்டார்கள். பின்னும் ஜனங்கள் காலைதோறும் தங்களுக்கு இஷ்டமான காணிக்கைகளை அவனிடத்தில் கொண்டுவந்தார்கள்.

யாத்திராகமம் 35:21,22 பின்பு எவர்களை அவர்கள் இருதயம் எழுப்பி, எவர்களை அவர்கள் ஆவி உற்சாகப்படுத்தினதோ, அவர்கள் எல்லாரும் ஆசரிப்புக் கூடாரத்தின் வேலைக்கும், அதின் சகல ஊழியத்துக்கும், பரிசுத்த வஸ்திரங்களுக்கும் ஏற்றவைகளைக் கர்த்தருக் குக் காணிக்கையாகக் கொண்டு வந்தார்கள்.

22. மனப்பூர்வமுள்ள ஸ்திரி புருஷர் யாவரும், அஸ்தகடகங்கள், காதணிகள், மோதிரங்கள், ஆரங்கள் முதலான சகலவித பொன்னாபரணங்களையும் கொண்டுவந்தார்கள்; கர்த்தருக்குக் காணிக்கை செலுத்தின ஒவ்வொருவனும் பொன்னைக் காணிக்கை யாகச் செலுத்தினான்.

ஏசாயா 66:20 இஸ்ரவேல் புத்திரர் சுத்தமான பாத்திரத்தில் காணிக்கையைக் கர்த்தருடைய ஆல யத்துக்குக் கொண்டுவருகிறதுபோல, உங்கள் சகோதர ரெல்லாரையும் அவர்கள் குதிரைகளின் மேலும், இரதங்களின் மேலும், குலாரிவண்டிகளின் மேலும், கோவேறு கழுதைகளின் மேலும், வேகமான

ஒட்டகங்களின் மேலும், சகல ஜாதிகளிடத்திலுமிருந்து எருசலேமிலுள்ள கர்த்தருக்குக் காணிக்கையாக என் பரிசுத்த பர்வதத்துக்குக் கொண்டுவருவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

அப்போஸ்தலர் 4:34,35 நிலங்களையும், வீடு களையும் உடையவர்கள் அவைகளை விற்று, விற்கப் பட்டவைகளின் கிரயத்தைக் கொண்டு வந்து, அப்போஸ தலருடைய பாதத்திலே வைத்தார்கள்....

1 நாளாகமம் 29:3-4 இன்னும் என் தேவனு டைய ஆலயத்தின்மேல் நான் வைத்திருக்கிற வாஞ்சை யினால், பரிசுத்த ஆலயத்துக்காக நான் சவதரித்த அனைத்தையும் தவிர, எனக்குச் சொந்தமான பொன்னையும் வெள்ளியையும் என் தேவனுடைய ஆலயத்துக்கென்று கொடுக்கிறேன்.

4.அறைகளின் சுவர்களை மூடுவதற்காகவும், பொன்வேலைக்குப் பொன்னும், வெள்ளிவேலைக்கு வெள்ளியும் உண்டாயிருக்கிறதற்காகவும், கம்மாளர் செய்யும் வேலை அனைத்திற்காகவும், ஓப்பீரின் தங்க மாகிய மூவாயிரம் தாலந்து தங்கத்தையும், சுத்த வெள்ளியாகிய ஏழாயிரம் தாலந்து வெள்ளியையும் கொடுக்கிறேன்.

4. காணிக்கைகளைக் கொடுக்கும் காரியத்தில் ஜனங்களுக்கு மன உற்சாகம் உண்டாகும்படியாக

யாத்திராகமம் 35:29 செய்யப்படும்படி கர்த்தர் மோசேயைக்கொண்டு கற்பித்த வேலைக்குரிய யாவையும் கொண்டுவர, இஸ்ரவேல் புத்திரருக்குள் தங்கள் இருதயத்தில் உற்சாகமடைந்த ஸ்திரி புருஷர் யாவரும் கர்த்தருக்குக் காணிக்கையை மனப்பூர்வ மாய்க் கொண்டுவந்தார்கள்.

1 நாளாகமம் 29:5-9,14 இப்போதும் உங்களில் இன்றைய தினம் கர்த்தருக்குத் தன் கைக்காணிக்கை களைச் செலுத்த மனப்பூர்வமானவர்கள் யார் என்றான்.

6. அப்பொழுது வம்சங்களின் பிரபுக்களும், இஸ்ரவேல் கோத்திரங்களின் பிரபுக்களும், ஆயிரம் பேருக்கு அதிபதிகளும், நூறுபேருக்கு அதிபதிகளும், ராஜாவின் வேலைக்காரராகிய பிரபுக்களும் மனப் பூர்வமாய்,

7. தேவனுடைய ஆலயத்து வேலைக்கு ஐயாயிரம் தாலந்து பொன்னையும், பதினாயிரம் தங்கக் காசையும், பதினாயிரம் தாலந்து வெள்ளியையும், பதினெண்ணாயிரம் தாலந்து வெண்கலத்தையும், லட்சம் தாலந்து இரும்பையும் கொடுத்தார்கள்.

8. யார் கையில் ரத்தினங்கள் இருந்ததோ, அவர்கள் அவைகளையும் கர்த்தருடைய ஆலயத்துப் பொக்கிஷத்திற்கென்று கெர்சோனியனான யெகியேலின் கையிலே கொடுத்தார்கள்.

9. இப்படி மனப்பூர்வமாய்க் கொடுத்ததற்காக ஜனங்கள் சந்தோஷப்பட்டார்கள்; உத்தம இருதயத் தோடே உற்சாகமாய்க் கர்த்தருக்குக் கொடுத்தார்கள்; தாவீது ராஜாவும் மிகவும் சந்தோஷப்பட்டான்.

14. இப்படி மனப்பூர்வமாய்க் கொடுக்கும் திராணி உண்டாவதற்கு நான் எம்மாத்திரம்? என் ஜனங்கள் எம்மாத்திரம்? எல்லாம் உம்மால் உண்டானது; உமது கரத்திலே வாங்கி உமக்குக் கொடுத்தோம்.

எஸ்றா 2:68 வம்சங்களின் தலைவரில் சிலர் எருசலேமிலுள்ள கர்த்தருடைய ஆலயத்துக்கு வந்த போது, தேவனுடைய ஆலயத்தை அதின் ஸ்தானத்திலே

எடுப்பிக்கும்படிக்கு, அதற்காக மன உற்சாகமாய்க் காணிக்கைகளைக் கொடுத்தார்கள்.

5. ஜனங்களுக்கு வேலை செய்யும் ஆசை உண்டாகும்படியாக

நெகேமியா 4:6 நாங்கள் அலங்கத்தைக் கட்டி வந்தோம்; அலங்கமெல்லாம் பாதிமட்டும் ஒன்றாய் இணைந்து உயர்ந்தது; ஜனங்கள் வேலை செய்கிற தற்கு ஆவலாய் இருந்தார்கள்.

நெகேமியா 2:18...அப்பொழுது அவர்கள் எழுந்துகட்டுவோம் வாருங்கள் என்று சொல்லி, அந்த நல்ல வேலைக்குத் தங்கள் கைகளைத் திடப்படுத்தி னார்கள்.

நெகேமியா 2 :20 அதற்கு நான் மறு மொழியாக: பரலோகத்தின் தேவனானவர் எங்களுக்கு காரியத்தைக் கைகூடிவரப்பண்ணுவார்; அவருடைய ஊழியக் காரராகிய நாங்கள் எழுந்துகட்டுவோம்;......

***ஏசாயா* 44:28** கோரேசைக்குறித்து: அவன் என் மேய்ப்பன்; அவன் எருசலேமை நோக்கி: நீ கட்டப்படு என்றும்; தேவாலயத்தை நோக்கி: அஸ்திபாரப்படு என்றும் சொல்லி, எனக்குப்பிரியமானதையெல்லாம் நிறைவேற்றுவான் என்று சொல்லுகிறவர் நான்.

6. எதிர்ப்புகளை ஒன்றுமில்லாமலாக்கும் ஜெபவீரர்கள் எழும்பும்படியாக

நெகேமியா 4:9,14,17,18 ஆனாலும் எங்கள் தேவனை நோக்கி ஜெபம்பண்ணி, அவர்கள் நிமித்தம் இரவும்பகலும் ஜாமங்காக்கிறவர்களை வைத்தோம்.

14. அதை நான் பார்த்து எழும்பி, பிரபுக் களையும் அதிகாரிகளையும் மற்ற ஜனங்களையும்

நோக்கி: அவர்களுக்கு பயப்படாதிருங்கள்; நீங்கள் மகத்துவமும் பயங்கரமுமான ஆண்டவரை நினைத்து, உங்கள் சகோதரருக்காகவும், உங்கள் குமாரருக் காகவும், உங்கள் குமாரத்திகளுக்காகவும், உங்கள் மனைவிகளுக்காகவும், உங்கள் வீடுகளுக்காகவும் யுத்தம்பண்ணுங்கள் என்றேன்.

17. அலங்கத்தைக் கட்டுகிறவர்களும், சுமை சுமக்கிறவர்களும், சுமையேற்றுகிறவர்களும், அவரவர் ஒரு கையிலே வேலை செய்து, மறுகையிலே ஆயுதம் பிடித்திருந்தார்கள்.

18. கட்டுகிறவர்கள் அவரவர் தங்கள் பட்ட யத்தை தங்கள் இடுப்பிலே கட்டிக்கொண்டவர்களாய் வேலை செய்தார்கள்,......

எபேசியர் 6:13 ஆகையால், தீங்கு நாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்து முடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும் படிக்கு, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள்.

16. பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங் களையெல்லாம் அவித்துப்போடத்தக்கதாய், எல்லா வற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக் கொண்டவர்களாகவும் நில்லுங்கள்.

7. ஆலயத்தைக் கட்டும்படி விஷேசித்த மனிதர்களை தேவன் எழுப்பி, தமது ஞானத்தின் ஆவியினால் நிரப்பும்படியாக

யாத்திராகமம் 35:30 பின்பு மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி; பாருங்கள், கர்த்தர் யூதாவின் கோத்திரத்தில் ஊரின் மகனான ஊரியின் குமாரன் பெசலெயேலைப் பெயர் சொல்லி அழைத்து,

31. அவன் விசித்திரமான வேலைகளை யோசித்துச் செய்யவும், பொன்னிலும் வெள்ளியிலும் வெண்கலத்திலும் வேலைசெய்யவும்,

32. இரத்தினங்களை முத்திரை வெட்டாக வெட்டிப்பதிக்கவும், மரத்தில் சித்திர வேலை செய்து சகல விநோதமான வேலைகளைச் செய்யவும்,

33. அவனுக்கு ஞானத்தையும் புத்தியையும் அறிவையும் அருளி, அவன் சகலவித வேலை களையும் செய்யும்படி தேவ ஆவியினாலே அவனை நிரப்பினார்.

***சகரியா* 4:6–9**......பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவி யினாலேயே ஆகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

7. பெரியபர்வதமே, நீ எம்மாத்திரம்? செருபா பேலுக்கு முன்பாக நீ சமபூமியாவாய்; தலைக்கல்லை அவன் கொண்டுவருவான்; அதற்குக் கிருபை யுண்டாவதாக, கிருபையுண்டாவதாக என்று ஆர்ப்பரிப் பார்கள் என்றார்.

9. செருபாபேலின் கைகள் இந்த ஆலயத்திற்கு அஸ்திபாரம் போட்டது; அவன் கைகளே இதை முடித்துத்தீர்க்கும்;......

1 நாளாகமம் 22:9–10 இதோ உனக்குப் பிறக்கப்போகிற குமாரன்(சாலொமோன்) அமைதி யுள்ள புருஷனாயிருப்பான்;...அவன் என் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்டுவான்.

8. சபைக்கு எதிரான பிசாசின் வல்லமைகள் மடங்கடிக்கப்படும்படியாக

மத்தேயு 16:18 இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன் பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை.

மத்தேயு 21:44 இந்தக்கல்லின் மேல் விழுகிறவன் நொறுங்கிப்போவான், இது எவன் மேல் விழுமோ அவனை நசுக்கிப்போடும்.

தானியேல் 2:34.....கைகளால் பெயர்க்கப்படாத ஒரு கல் பெயர்ந்து உருண்டுவந்து .....சிலையை மோதி நொறுக்கிப்போட்டது.

அப்போஸ்தலர் 9:4,5 சவுலே சவுலே என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய்..... நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே முள்ளில் உதைக்கிறது உனக்கு கடினமாமே என்றார்.

***சங்கீதம்* 2:9** இருப்புக்கோலால் அவர்களை நொறுக்கி குயக்கலத்தைப்போல் அவர்களை உடைத்துப் போடுவார்.

***ஏசாயா* 54:17** உனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதே போகும் உனக்கு விரோதமாய் நியாயத்தில் எழும்பும் எந்த நாவையும் நீ குற்றப்படுத்துவாய்.

BUILDING
THE BODY OF CHRIST

Plan

Pray

Give

Build

எழுந்து கட்டுவோம் வாருங்கள் என்று சொல்லி,
அந்த நல்ல வேலைக்குத் தங்கள் கைகளை
திடப்படுத்தினார்கள்.

APOSTOLIC COUNCIL OF INDIA DIOCESE

Central Diocesan Office

1/543, Melapatty, Hanumantharayan Kottai - 624 054.
Dindigul District, Tamil Nadu, India.

E.mail : info@acidiocese.org, web : www.acidiocese.org

Phone: **0451 2480100**